உ

கணபதிதுணை.

# வித்யாபாநு.

கோநகர்க்

கற்பகவிநாயக கலாசாலையினின்றும் வெளிவரும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக" திருக்குறள்.

Vol. IX. 1917-௵. தொகுதி ௯.

நள௵ தைமீ முதல்
பிங்கள௵ மார்கழிமீ வரை.

பத்திராதிபர்கள்:
மோ. வெ. கோவிந்தராஜையங்கார்,
அரு. ராம. சுப்பிரமணியன்செட்டியார்.

கோநகர்.
தன வைசியன் அச்சியந்திரசாலை.
1918.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| அதிசயவிஷயங்கள்- | பத்திராதிபர் | 200, 300 |
| அரியூர்மிஸ்டர் சாமிநாதையர்மரணம்-பத்திராதிபர் | | 225 |
| அவதாரசமயம்- | T. V. வேங்கடராகவலு ஐயர் | 465 |
| அழகு (செய்யுள்) | ஆனைமலை ஸ்ரீநிவாசமுதலியார் | 336 |
| அறஞ்செயவிரும்பு- | S. ஆழ்வாரையங்கார் | 373 |
| அறிவின்பயன் யாது | வ. மு. இரத்தினேசுவரையர் | 129 |
| ஆபரணம்- | | 280 |
| இந்தியதேசத்துப் பூர்வசரித்திரச் சுருக்கம்- | பத்திராதிபர் | 261 |
| இந்திய புத்திரர்களுக்கோர் விஞ்ஞாபனம்- | B. S. ராமசுப்பையர் | 97 |
| இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர்-பத்திராதிபர் | | 385 |
| இருகடல் (செய்யுள்) | ஆனைமலை ஸ்ரீநிவாசமுதலியார் | 253 |
| இளங்கோவடிகள்- | V. P. ஸ்ரீநிவாச ஐயங்கார் | 49,89 |
| உலோகவகையால் புத்தகங்கள் | பத்திராதிபர் | 250 |
| உள்ளூர் வர்த்தமானங்கள்- | | 80,120,398 |
| ஐரோப்பியயுத்தத்தில் யார்ஜயம் பெறுவர் | R. இராஜகோபாலராவ் | 298 |
| ஒழுக்கத்தினுயர்வு- | பத்திராதிபர் | 66 |
| ஒழுக்கமுங்கல்வியும் | அ. கோபாலையர் | 9 |
| ஓர்சந்தேகவினா | K. கல்லையா ஆசாரி | 104 |
| கடவுள்வணக்கம்- | | 1 |
| கண்ணாடிசெய்யுமுறை | தொழில் | 431 |
| காளிம்பன்- | சி. கு. நாராயணசாமி முதலியார் | 414 |
| கீழ்நாட்டு நாகரிகமும் மேனாட்டு நாகரிகமும் | பத்திராதிபர் | 289 |
| கீழச்செவல்பட்டிக் கொலைக்கேஸ் தீர்ப்புகள் | | 430 |
| சங்கரபகவத் பாதாசாரியசுவாமிகள்- பத்திராதிபர் | | 169 |
| சடையப்பவள்ளலாது சரித்திரத்தில் ஓர்பகுதி | சி. கு. நாராயணசாமிமுதலியார் | 105 |
| சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்- | | 33, 77, 114, 157, 227, 233, 239, 273, 313, 355, 395, 434, 453 |
| சிவகைங்கர்யநிகழ்ச்சி | | 52 |
| சீவகாருணியம்- | சண்முகநாதன் | 34 |

| | | |
|---|---|---|
| கலகுஜெ (காவல்) | வ. வி. நடேசன்செட்டியார் | 301, 337, 877, 417, 457. |
| சுவாமிவிவேகானந்தர்- | பத்திராதிபர் | 308 |
| செந்தமிழ்ச்சிறப்பு மதிப்புரை- | அ. கோபாலையர் | 433 |
| தஞ்சைஜில்லாச் சிறுவர்கள் | மிஸ்டர். ஸ்டாதம் துரையவர்கள் | 411 |
| தந்தைசொன்மிக்க மந்திரமில்லை- | மணிவாசகன் | 47, 94. |
| தமிழ்த்தெய்வமாலை- | அ. கோபாலையர் | 399 |
| தமிழ்ப்புலவர்சரித்திர முகவுரை- | வ. மு. இரத்தினேசவலையர் | 167 |
| தருமபரிபாலனம்- | S. ஆழ்வாரையங்கார் | 182, 201, 267. |

**தலையங்கங்கள்.** (Leader.)

பத்திராதிபர்:—

(1) வித்தைவிரும்பு- 4
(2) நமதுமாணவரின் தற்காலக்கல்விமுறையைப்பற்றிச் சுவாமிவிவேகானந்தரின் அபிப்பிராயம். 7
(3) கல்விமுறையில் சீர்திருத்தம்- 41
(4) கல்வியும் தர்மமும்- 81
(5) இந்தியக் கல்விமுறை- 121
(6) கல்வியும் மதமும்- 161
(7) கல்வியும் ஒழுக்கும்- 241
(8) போல்பூர் பிரமசரியாசிரமம்- 281
(9) கல்வியும் தேசாபிமானமும்- 321
(10) மாணவர்க்கு மதபோதனையவசியமா- 361
(11) ஜப்பான்தேசத்துக் கல்விமுறை- 401
(12) ஆங்கிலப்பாதிரிமார்களின் ஆதிக்கமும் ஆங்கிலக் கல்விமுறையின் ஸ்தாபனமும் 441

| | | |
|---|---|---|
| தாதாபாய் நவரோஜி- | பத்திராதிபர் | 217 |
| தியானவும் அதன்பயனும்- | பத்திராதிபர் | 145 |
| தொண்டைமண்டலசதகம், புதுவைச் சேதிராயன் | சி. கு. நாராயணசாமி முதலியார் | 193 |
| தொழிலவிவிருத்தி- | தொழிலிலாகாத்தலைவர் | 149 |
| நம்பியாண்டார் நம்பிசரித்திரம் | பத்திராதிபர் | 26 |
| நமதுபத்திரிகை | பத்திராதிபர் | 2 |
| நலம்(செய்யுள்) | ஆனைமலை ஸ்ரீ சிவாசமுதலியார் | 376 |
| நன்னடக்கை | பத்திராதிபர் | 212 |

| | | |
|---|---|---|
| நாட்டரசன்கோட்டைவித்தியா பரிபாலன சங்கம் | R. ராஜகோபாலராவ் | 203 |
| நானாவிதக்குறிப்புகள் | | 349 |
| நீதிமொழிகள் | | 216 |
| நீதிவார்த்தைகள் | பத்திராதிபர் | 88 |
| பத்திரிகையாராய்ச்சி | | 73 |
| பத்திரிகையும் அதன் பிரயோசனமும் | இராஜகோபாலராவ் | 126 |
| பம்பாய் ஜீவகாருணிய பண்டு | பத்திராதிபர் | 327 |
| பலவகைக்குறிப்புகள் | | 474 |
| பழமையும்புதுமையும் | அ. கோபாலையர் | 369 |
| பழையனூர் நீலி | சி. கு. நாராயணசாமி முதலியார் | 245 |
| பள்ளிக்கூடத்தோட்டமும் அதன்பிரயோசனமும் | G. நாராயணசாமி ஐயர் | 468 |
| பாத்திரமறிந்து பிச்சையிடுதல் | M. V. இராஜம் | 209 |
| புதுக்கோட்டைத் தர்பாரவர்களால் விளம்பரம் | | 153 |
| புதுக்கோட்டைநவராத்திரிபண்டிகை | அஸிஸ்டெண்ட் திவான் | 353 |
| புதுக்கோட்டை இராச்சியம் | பத்திராதிபர் | 311, 383, 425. |
| புதுக்கோட்டை இராதாகிருஷ்ணையர் சரித்திரம் | அ. கோபாலையர். | 57 |
| புதுக்கோட்டை இராதாகிருஷ்ணையர் மேல சாமகவி மாலிகை | மின்னூருத்தீன் | 64 |
| பொதுவர்த்தமானங்கள் | | 37, 119, 240. |
| மகன்றந்தைக்காற்றும் உதவி | S. ஆழ்வாரையங்கார் | 294 |
| மதராஸ் யுத்தரிலிஸ்டாம்பு | டெ. ஆனரெரி செக்ரடரி | 102 |
| மதிப்புரை | | 56, 113, 152, 239, 279, 352, 470 |
| மதுரைத் தமிழ்ச்சங்கவரலாறு | அ. கோபாலையர் | 329 |
| மரவள்ளியுமதன் உபயோகங்களும் | பத்திராதிபர் | 257 |
| மனத்தூய்மையும் பொதுநன்மையும் | பத்திராதிபர் | 137 |
| மித்திரர்களுக்குஓர்விக்ஞாபனம் | நாட்டரசன்கோட்டை நகரத்தார் | 148 |

| | | |
|---|---|---|
| மூடரும் முனிவனும் (செய்யுள்) | ஆனைமலை சீநிவாச முதலியார் | 197 |
| மூலரோகம் | அ. சௌம்ய நாராயணையங்கார் | 249 |
| மேன்மை (செய்யுள்) | ஆனைமலை சீனிவாசமுதலியார் | 433 |
| வஞ்சிமாநகர் மதிப்புரை | சு. ஹரிஹரையர் | 393 |
| வாணியன்தாதன் | சி. கு. நாராயணசாமி முதலியார் | 135 |
| விடாமுயற்சி | மணிவாசகன் | 17 |
| விடுகதை வினா | சு. மு. பழநியப்பன் | 474 |
| விவசாயம்:—சப்பாத்துக் கள்ளியின் உபயோகங்கள் | அஸிஸ்டெண்டு விவசாய டைரக்டர் | 21 |
| விவசாயம்:-கொளிஞ்சிவிதை சேகரிக்கும்விதமும்அதை விதைக்குமுன் செய்யவேண்டிய பக்குவமும் | G. செல்வரங்கராஜு | 69 |
| விவசாயம்:—(சாகுபடியா சண்டையா) | K.R. சங்கரையர் விவசாய இன்ஸ்பெக்டர் | 108 |
| விவசாயம்:—(கலப்பைகளுமுழவும்) | துரைசாமி ஐயங்கார் விவசாய போதகர் | 185 |
| விவசாயம்:—(நெல்ஒற்றைநாற்றுநடுகை) (செய்யுள்) | மீ. ச. பீருமகம்மது | 254 |
| விளம்பரம் | | 104, 160. |
| விநோதக்கூற்று (செய்யுள்) | ஆனைமலை சீனிவாசமுதலியார் | 335, 376. |
| வைத்தியக்குறிப்புகள் | | 75,119, 160, 230, 275, 432. |

ஸ்ரீ

கணபதி துணை.

# வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

[All Rights Reserved]

| தொகுதி. | நள-ஹு தை-மீ | பகுதி. |
| --- | --- | --- |
| 9 | 1917 பிப்ரவரி. | 1 |

## கடவுள் வணக்கம்.

"முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறம்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதேவ ருங்கை தொழுங்கோவை யுறவுன்னுவாம்."

(மகாபாரதம்)

"நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்."

(தாயுமானவர்.)

# நமது பத்திரிகை.

இப்பேருலகில் வழங்கிவரும் பாஷைகள் எண்ணிறந்தனவாகும். அவற்றுள் இலக்கணம் அமையப் பெறாதனவும், அமைந்தும் முற்றுப் பெறாதனவுமான பாஷைகள் பல நீங்க, இலக்கணவரம்பு பெற்ற பாஷைகள் சிலவேயாம். அச்சிலவற்றுள்ளும் ஆரியமும் தமிழுமே மேம்பட்டுள்ளனவெனக் கற்றுணர்ந்த பெரியோர்களாற் கருதப் பெறுகின்றன. வடநாடுகளில் ஆரியம் அலங்காரங்களுடன் உலவிவருதல் போலத் தென்னாடுகளிலும் தமிழ் பற்பல அணிகள் பெற்றுலவி வருகின்றது.

ஆரியம் போலவே தமிழும் பல கற்ற பண்டிதர்களாலும் பலநூற்ற மன்னர்களாலும் ஆதரிக்கப்பெற்று, லௌகிக வைதிகவுண்மைகளைத் தெள்ளிதின் உணர்த்தக்கூடிய அரிய பெரிய நூல்கள் பல இயற்றப்பெற்று விரிந்து கிடக்கின்றது. அந்நூல்கள் பலவாயிருப்பினும், பெரும்பாலும் செய்யுள்களாகவியற்றப் பெற்றுள்ளமையின், யாவரும் அநுபவிக்கக் கிட்டாத அரும் பொருளனவாயிருக்கின்றன. இக்குறையை நீக்கவென்றே பல அறிவாளிகள் முன்வந்து வசன நூல்களை எழுதியுதவுகின்றனர். இப்படியுதவக் கருதிய பெரியோர்கள் பலர் இருப்பினும், அவர்கள் யாவரும் தமது அநுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் ஒவ்வொரு நூலின் வழியாகவே வெளிப் படுத்தித் தந்துதவ வேண்டும்; அது, பொருளினருமையால் இயலாத காரியமாகிறது. ஆகலின், இது போன்ற பத்திரிகைகள் அநேகம் வேண்டப் பெறுகின்றன.

உலகிலுள்ள ஆயிரத்துக்கு அதிகமாகவே பத்திரிகைகள் உலவி வருவனவாயினும், நந்தமிழ் நாட்டில், தோன்றியழிந்தன

பலவாகச் சிலவே இலகி வருகின்றன. அவற்றுள்ளும் அமிழ்தினு மினிய நற்றமிழ் மொழியில் வெளிவருவன மிகச்சில்லவேயாம். உற்ற பாஷையாகிய தாய்ப்பாஷையினால், ஒரு நாட்டில் கருத்துக் கள் வெளியேற்றப் படாமல், மற்றைப்பாஷைகளால் வெளியேற்றப் படின், அந்நாடு நாகரிகத்தில் செழித்துயர்வதற்கு மார்க்கமிராது. ஆகையினால் தமிழில் வசன ரூபமாக வெளிவரும் பத்திரிகைகளே தமிழ்மக்கள் யாவருக்கும் எளிதிற் பயனளித்து, நம் நாடு நாகரிகத் தி லுயர்ந்து ஒற்றுமையைப் பெறுவதற்குத் தக்க ஊன்றுகோல் களாகும்.

அந்தவிதமான பத்திரிகைகளுள் நம் பாநு, தோன்றிய பல வாண்டுகளாக அநேகவிதமான ஆராய்ச்சிகளாலும் பெரியோரது அநுபவங்களாலும் நற்றமிழ்நாட்டு மக்கட்குப் பேருதவி புரிந்திருக் கிறது. இது தமிழ் மக்கள் யாவரும் உணர்ந்ததே. எனினும், இடையே இரண்டு வருஷகாலம் வாரம் இருமுறையில் வெளி வந் துலவிய நம் பாநு, இனி முன்போலவே மாதம் ஒருமுறையாக வெளியேறிப் பல மேதாவிகளினுடைய அருமைத்திருவாக்கினின்று எழும் அரிய உபந்நியாஸங்களையும் ஆராய்ச்சிகளையும் அநுபவங் களையுமே மிகவும் ஸாரதமமாகத் திரட்டிக் கொடுத்து நேயர்களது மனதைப் பூரித்துக் களிக்கச்செய்ய, இந்தத் தைமாதம் முதல் தொடங்கியிருக்கிறது.

நற்றமிழ்நாட்டில் தற்காலம் தமிழ்ப்பாஷையை வளர்ப்பதற் கென்றே கங்கணம் கட்டிக் கொண்டு முன்னேறியிருக்கிற நாட்டுக் கோட்டை நகர வைசியசிகாமணிகள், ஆங்காங்கு ஏற்படுத்தியிருக் கும் கலாசாலைகளிலும் சபைகளிலும் நிகழ்ந்துவரும் அரிய பெரிய உபந்நியாஸங்களையும் அவ்வப்போது விவரமாக வெளிப் படுத்து வதற்கு இந்த மாதாந்தப் பத்திரிகையே ஒரு தக்க கருவியாக விருக் கிறது.

இந்நாட்டின் தமிழ்வளர்ச்சிக்குக் காரணஸ்தரான மகிபாலன்— பட்டி வித்வான், மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் ஒருமுறை தங் கள் அபிப்பிராயத்தை எம்மிடத்தில் சொல்லியுள்ளபடி, இந்தப்

பத்திரிகையால் (பிறமதத்துவேஷமின்றி) ஹிந்து மதங்களின் உயர்வும் தமிழ் பாஷையின் வளர்ச்சியும் நம்மவர்களின் கூட்டுறவும் நாளடைவில் பெருக்கமடைந்து வரும் என்பதற்கு அநுகுணமாகவே, இந்தப் பத்திரிகையும் இதற்குத் துணையான தனவைசியன் அச்சியந்திரசாலையும் மஹாதேவ முருகப்ப செட்டியார் அவர்களால், தங்களது அன்பு ததும்பிய உள்ளத்துடன், இந்நகர்க் கலாசாலைக்குப் பாத்தியமாக ஏற்றுக் கொள்ளப் பெற்றுச் செவ்வனே நடைபெறத்தொடங்கியிருக்கின்றன.

அருட்பெருஞ்சோதி அவர்களது உள்ளத்திலேயே எக்காலும் குடிகொண்டெழுந்தருளியிருந்து, எண்ணங்களைத் தவறாது நிறைவேற்றுவிப்பதை நாம் அடிக்கடி அநுபவமுறையில் கண்டிருக்கின்றோமாகலின், அச்சோதியின் திருவருளால் இந்நன்முயற்சியும் வளர்ந்து பரந்து மலர்ந்து யாவருக்கும் பலனளிக்கும் என்பது திண்ணம்.

சுபமஸ்து.

## வித்தை விரும்பு.

இது நந்தமிழ் மூதாட்டியார் அருமைத் திருவாக்கினின்றும் எழுந்தது.

நாம் அடையவேண்டிய நான்காவது பயனாகிய வீடு பேற்றினுக்கு அத்யந்த ஸாதகமாகவுள்ளது ஞானமேயாகும். ஒருவனுக்கு ஞானத்தின் உயர்வே அறத்தின் வழியை உறுதிப்படுத்தும். கல்வியிற் பெரியாரும் "அறிவின் மேலதன்றோ அறத்தாறுதான்" என்று கூறியருளினர். எனவே, ஆத்மா உயரும் சார்வுபெற அறத்தின் மேம்பாடும், அது மேம்பட அறிவின் பெருக்கமும் வேண்டற்பாலனவாம்.

ஒருவரது மனம் நல்லதொன்றைப் பற்றியேறாவிடின் அறிவு வளராது. ஆகலின் அறத்தினை எய்துதல் அருமையாகிவிடும். இது பற்றியே நமது மூதாட்டியார் வித்தை விரும்பு என்று, மனத்தினிடத்தில் விருப்பத்தை யுண்டுபண்ண வேண்டுமென்றார்கள். மனது விரும்பவே ஞானம் தோன்றும். வித்யாபாநு உதயமாகவே அவித்யாந்தகாரம் ஒழிந்துபடுமன்றோ?

வித்தையும், பராவித்தை அபராவித்தை என்னும் இரு பிரிவாகி லௌகிக வைதிக ஞானங்களை வற்புறுத்துகின்றது. அவற்றுள் லௌகிகஞானம் உடலுக்குறுதியையும் வைதிகஞானம் உயிருக்குறுதியையும் பயப்பனவாம். படிப்படியாக உயர்ந்து ஏறவேண்டிய ஒரு ஆத்மாவுக்கு இவ்விரண்டு அறிவும் வேண்டற்பாலன. ஏனெனில், உடலுக்குறுதியான நூல்களிற் பயின்று அவற்றுக்குத்தக நடந்துவாராவிடின், உடல் ஒரு வழிப்படாமல், பகுத்தறிவில்லாத பறவை விலங்குகள் போலப்··· பெண்டிராற் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பையூண்டு, உண்டிராக் கிடக்கும்போதே உடலுக்கே கரைந்து நைந்து என்று பெரியார் கருதியபடி, உடலுக்கே எக்காலமும் உழைக்கவேண்டிவரும். அப்போதுதான் காமாதிகள் வலியுறும். அங்ஙனன்றி, லௌகிக நூல்களிற் பயின்று அவற்றின்படி நின்று, விலக்கியன ஒழித்து விதித்தன செய்து வருவாராயின், உடலைத் தக்கபடியாகத் தான் கருதியுள்ள தருமத்திலே ஏவுந்திறமையைப் பெற்றவனாவான். சரீரமே தருமத்தைச் சாதிப்பதற்குத் தக்கதொரு கருவியன்றோ? இப்படி ஒருவன் தன் உடலுக்குத் தான் வசமாகிவிடாமல், உடலைத் தனது வசமாக்கி என்று எப்போது செய்துகொள்கிறானோ, அன்றே அப்போதே வீடென்று பெரியாரும் பணித்துள்ளார்கள். அப்படியல்லாது, வைதிக நூல்களில் எத்தனை விதங்கள்தாம் கற்கினும் கேட்கினும் மனம் ஒடுங்காது. அஃது ஒடுங்காதாக யானெனும் அகந்தைதான் எவ்வளவும் மாறாது. அப்போது வைதிகஞானம் நிலைபெறாமல் விழலுக்கிறைத்த நீராகிவிடும். இதனாலேதான் ஒளவையார் வித்தை விரும்பு என்றும் பொதுப்படக் கூறினார்கள் போலும்.

உலகில் அறிவுடைய பலரால் இயற்றப்பெற்று நிலவுகின்ற நூல்களுள் பல அறத்தினை ஆக்குவனவாகவும் பல பொருளினைப் பொருந்துவனவாகவும் பல இன்பத்தினை இசைப்பனவாகவும் விளங்குகின்றன. இவை ஒவ்வொன்றும் மற்றொன்றினைப் பற்றுக்கோடாகப் பற்றியே யமைந்துள்ளனவாம். பொருளில்வழி அறமும் இன்பமும் நன்கு எய்தப் பெறாமையும், பொருளிருந்தும் அறமில்வழி இன்பம் நுகரப் பெறாமையும், அறத்தினுக்கும் பொருளினுக்கும் இன்பமே விச்ராந்தி ஸ்தானமாகவிருத்தலால், இன்பம் பெறாதவழி அவ்விரண்டும் பயன்பெறாமையும் அநுபவத்தில் காணப்படுகின்றன.

வைதிகவுணர்ச்சியால், தன்னையும் தலைவனையும் உணரப்பெற்ற ஒருவனே, ஏனைய லௌகிக வுணர்ச்சியில் உறுதிபெற்றுத் தான் கற்ற பல்விதமான கேள்விகளும் பயன்பெறுமாறு கருதித் தனக்கும் பிறர்க்கும் நன்றி செய்யத் துணிகிறான். ஏனெனில், தலைவனை அறிந்த அவன் அத்தலைவன் எங்கும் வியாபித்துள்ள தன்மையைத் தவமுதிர்ச்சியால் அறிந்து, ஏனைய ஜீவர்களும் அத்தலைவனது ஸம்பந்தம் பெற்றவர்களே யெனத் தெளிந்து, அவர்களிடம் அன்பு செலுத்துகிறான். அது தருமத்தை மலர்த்தி அவன் அநுபவிக்க வேண்டிய அந்தமில் பேரின்பப் போகக்கனியை அளிக்கின்றது. இந்தப் பழக்கம் பெண்பாலர்க்கும் ஒத்ததேயாகும். பெண்கள் ஒழுங்காகக் குடும்பத்தினை நடத்தவேண்டியபடி கல்வி கேள்விகளிற் பழகிராவிடின், புருஷனுக்கு அன்பு ஜனித்தல் அருமையாகும். அன்பு அரும்பாவிடின், அருள் முதிராது. அது முதிராதாயின் தருமம் மலரத் தடைபடும், படவே போகக்கனி பழுத்தல் அரிதேயாகும்.

எனவே, ஆண் பெண் இருபாலார்க்கும் ஒழுக்கத்தின் உயர்வைத் தரும் கல்வி கேள்விகளே வேண்டப் பெறுவன என்பது பெற்றோம். அத்தகைய விவரங்களைத் தரும் பத்திரிகைகளே உலகுக்குறுதி பயப்பனவாகும். ஆகலின், மேற்குறித்த விசேஷங்களுடன் கூடிய பல மேதாவிகளது அறிவுடன் நமது வித்யாபாநு மாதந்தோறும் உதயமாகி யுலகில் நிறைந்துள்ள அஞ்ஞானவிருளைச் சிதைக்குமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.

## நமது மாணவரின் தற்காலக் கல்விமுறையைப் பற்றி ஸ்வாமி விவேகாநந்தரின் அபிப்பிராயம்.

"நாம் நமது பால்யவயது முதல் நம்பிக்கைக்கு மாறுபாடான கல்வியையே பெற்று வருகிறோம். நமது படிப்பின் முறையால் நாம் நாமல்ல வென்பதைக் கற்று வருகிறோம். மஹான்கள் நமது நாட்டில் அவதரித்து அரிய பெரிய காரியங்களை ஸாதித்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள நமக்கு அவகாசமே ஏற்படுகிறதில்லை. நமக்கு ஆகவேண்டிய வழிகளில் நாம் கற்பிக்கப்படுகிறதேயில்லை. நமது கைகளையும் கால்களையும் நாம் எப்படி உபயோகித்துக்கொள்ளவேண்டுமென்று நாம் அறிகிறோமில்லை. ஆங்கிலேயர்களினுடைய மூதாதைகளைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ளுகிறோமேயன்றி நம்மவரைப் பற்றி நாம் அறிந்துகொள்ளக் கவனம் செலுத்துகிறோமில்லை."

"நமது சர்வகலாசாலைச் சங்கம் நம்மவரைக் கேவல குமாஸ்தாக்களாக மாற்றுவதற்குத் தகுந்ததொரு இயந்திரமாகவிருக்கிறதேயன்றி வேறன்று. நம்மவர்களில் எத்தனை பெயர் நமது வேதத்தினிடத்தும் வேதஸாரமான கீதையினிடத்தும் சிரத்தை வைத்திருக்கிறார்களென்று எண்ணிப் பாருங்கள்! எண்ணிப் பார்த்தால் துக்கிக்கவேண்டியே வரும். வேதத்தை ஒரு புராதனமான பாடல் என்றும், கீதையை மத்தியில் செய்யப்பட்டதொரு இடையீடு என்றுமே அறிவர். இந்தியாவுக்கு வெளியிலுள்ள தேசங்களைப் பற்றிய விஷயங்களை மாத்திரம் கேட்டுருவேற்றியேனும் அறிந்துகொள்ள முயல்கிறார்களேயன்றி, தமது மூதாதைகளின் ஒழுகலைமுறைவரையிலாவது அறிந்துகொள்ள முயல்கிறார்களில்லையே! எங்ஙனம் ஈதொழுகலைமுறையை அறிவர்!!"

"நாம் விரும்பிக்கற்கவேண்டுவன யாவையெனின், ஐரோப்பிய சாஸ்திரமுறையை நமது வேதாந்தக்கொள்கையுடன் பொருத்தி, பிரமசர்யத்தை நமக்கு உற்றவிரதமாகக்கொண்டு நமது பூர்வீக ஆசாரத்தில் உள்ள சிரத்தையைக் கைசோரவிடாமல் கற்றுவரவேண்டுவதே. இதே ஒருவனை மனிதனாக்கும். கழுதையும் குதிரை

யும் கட்டிப்புரண்டகால் வரும் தீமையை விளக்கும் கதை முத லியவைகளாற் கல்விகற்பிக்கத் தொடங்குவதை விடுத்து, நமது பூர் விகரது தருமங்களையும் அவர்கள் கற்பித்துள்ள நீதிகளையும் அவர் களது உத்தம சரிதங்களையும் சிறிது சிறிதாகக்கொடுக்கும் பாடங் களையே கற்பிக்கத்தொடங்கவேண்டும்."

"உபாத்தியாயர்கள், மாணவனுக்குக் கற்பிப்பதாலேயே, அவனைக்கெடுத்துவிடுகிறார். ஒவ்வொரு சிறுவனிடத்திலும் பெரிய வரிடத்திலும் அறிவு இருக்கின்றது என்றும், அது தன்னைத்தூண் டுவதற்கோர் துணையையே விரும்புகின்றதென்றும், வேதாந்தம் முறையிடுகிறது. அதனைத்தூண்டிவிடவேண்டியதே உபாத்தியா யருடைய பொறுப்பாகும். ஆனால் அதைத்தூண்டும்போது, தாம் பொறுமையாக இருந்து தமது காரியத்தைச் சிறுகச்சிறுகச் செய்து வரல்வேண்டும். அப்படிச்செய்துவரின் மாணவர் தமது அறிவைத் தக்க வழிகளில் பிரயோகித்து வளர்த்துக்கொள்வர். அப்போது அவரது கைகால் முதலிய அவயவங்கள் தக்கபடி பிற்செல்லும். 'அன்றே' இத்தமதப்பயிர் வேரூன்றுகிறது. உயர்தரப்படிப்பைப் பற்றி அதிகமாகக்கவனிக்க இயலாவிடினும் யாதேனும் தொழிற் கல்வி அவசியம் கற்பிக்கப்படவேண்டும். அதனால் அவர் தொழு லுண்டுவாழும் தொழிலைத்தேடிப்புகாமல் தமது கால்களில் தாமே நிற்கமுயல்வர்."

"மாணவர் எப்போதும் நல்லொழுக்கமுடையவோர் நல்லறி வாளரது மேற்பார்வையிலேயே இருந்துவரல்வேண்டும். அப்போது தான் பரோபகாரமும் தன்மறுப்பும் நல்லொழுக்கமும் பழகிவரும். எதுவரையில் த்யாகிகளாகிய யோகிகள் நம்மவர்க்கு ஆசிரியராக இருந்து வந்தார்களோ, அதுவரையில்தான் இந்தியாசெழித்திருந் தது. அவர்கள் மறைந்துவிட அல்லது குறைந்துவிடவே ஹிந்து தருமமும் மறைந்து ஒழுக்கமும் குறைந்துவிட்டன. ஆகையால் த்யாகிகளாகிய யோகிகள் நமது நாட்டில் நல்லொழுக்கத்துடன் பெருகிவரல்வேண்டும். அப்படி அவர்களது பெருக்கத்தை நாம் விரும்புவோமாயின், நமது மாணவர்க்கு நாம் மேலே சொல்லிவந்த படியான முறையிலேயே கல்விகற்பிக்கத் தொடங்கவேண்டும்."

# * ஒழுக்கமும் கல்வியும்.

கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியோர்களே!

இந்தமகா ஸபையிலே, முன்காலத்தில் ஒழுக்கம் கல்வியென்னும் இரண்டினாலும் ஒப்புயர்வற்று விளங்கிய பீஷ்மரின் ஞாபகார்த்தமாக இப்பொழுது கொண்டாடப்படுகிற புண்ணியதினமாகிய இந்த ரதஸப்தமியிலே, அவ்விரண்டினாலும் மேம்பட்டு விளங்குகின்ற கனம் அக்கிராஸனாதிபதியவர்களின் முன்னிலையிலே, 'ஒழுக்கமுங்கல்வியும்' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்காக மகிழ்ந்து, இப்பாக்கியத்தை யெனக்குத் தந்த இச்சபையார்க்கு நன்றி செலுத்தி, நான் எடுத்துக்கொண்ட விஷயத்தை என் அறிவுக்கெட்டிய அளவிற் சுருக்கமாகப் பேசி முடிக்கின்றேன். பிழை பொறுத்தருளுதல் பெரியோர் கடன்.

ஒழுக்கமுங்கல்வியும்:—ஒழுக்கமாவது—நூல்களிலே தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்டவாறு ஒழுகுதல்; கல்வியாவது—தாம் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். இவ்விரண்டையும் மனிதர்களுக்கு இரண்டு கண்ணென்னலாம். மனிதர் ஆயுளுள்ளளவும் இவ்விரண்டையுமே கைக்கொண்டு நிற்கவேண்டும். இக்கருத்தை பற்றித் திருவள்ளுவ நாயனாரும் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப் படும்." எனவும், கல்வி என்னும் அதிகாரத்தில்

---

* இது தேவகோட்டை வைசிய சிவானந்த ஸபையின் நான்காம் வருஷக் கூட்டத்தில், டிப்டிகலெக்டர் சாய்பகதூர் T. N. சிவஞானம்பிள்ளையவர்களின் அக்கிராசனத்தில் (29-1-17ல்) கோனாபட்டு கற்பக விநாயக வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பண்டித. அ. கோபாலையரவர்கள் செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன், சாந்துணையுங் கல்லாத வாறு." எனவுங் கூறினர், இவ்விரண்டும் உயிர்க்கு உற்ற துணையாய் நின்று, இம்மைக்குரிய புகழ் புண்ணியங்களைத் தந்து, மறுமையிலும் உயிரோடு தொடர்கின்றன. இவற்றை, "பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித், தேரினும் அஃதே துணை.", "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு, எழுமையும் ஏமாப் புடைத்து." என்னுந் திருக்குறள்களால் அறியலாம்.

உலகத்தில் ஒழுக்கம் கல்வி யென்னும் இவ்விரண்டும் வித்தும் மரமும்போல ஒன்றற்கொன்று ஆதாரமாயிருக்கின்றன. அஃதெவ்வாறெனில், திருக்குறளிலே, "மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்." என்றதனாலே, பிராமணர்கள் வேதத்தை மறந்தாலும் நல்லொழுக்கத்தை விடாது கைப்பற்றி நிற்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது; எனினும் இக்குறளின் கருத்து 'ஓதுதலையும் மறக்கலாகாது' என்பதும், 'எல்லாவருணத்தாரும் நல்லொழுக்கத்தினின்று தத்தமக்குரிய கல்வியைக் கற்கவேண்டும்' என்பதும் ஆம். இக்கருத்தை இக்குறளின் உரையிலே, "மறந்தவழி இழிகுலத்தானுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தால், மறப்பினும் என்றார். சிறப்புடை வருணத்தையெடுத்து மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்குங் கொள்ளப்படும்." என்னும் அழகிய இரண்டுவாக்கியங்களாலே, ஆசிரியர் பரிமேலழகர் விளக்கியிருக்கின்றார். இனி, "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக." என்றதனாலே, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்களை உணர்த்தும் நூல்களைச் சந்தேக விபரீதம் நீங்கக் கற்று, அங்ஙனம் கற்றபின்பு அக்கல்விக்குத் தக்கவண்ணம், அந்நூல்கள் சொல்லுகின்ற நெறியின்கண்ணே நிற்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது. எனவே இவ்விரண்டு குறளாலும், முன் சொன்னவண்ணம் ஒழுக்கம் கல்வியென்னும் இரண்டும் ஒன்றற்கொன்று ஆதாரமாயிருக்குந் தன்மை புலனாம்.

இவ்விரண்டும் உயர்ந்தனவேனும், இவற்றில் ஒன்றற்கொன்று, சிறிதும் வேறுபாடு இன்றோ எனின்,—உண்டு: கல்வி கற்காவிடின்

அந்தந்த வருணத்துள்ளே சிறிது தாழ்வுமாத்திரம் ஏற்படும். ஒழுக்கத்தைக் கைவிடிலோ, வருணமே மாறிப்போம். ஒரு பிராமணன் வேதமோதாவிடினும் நல்லொழுக்கத்தைக் கைவிடாதிருந்தால், அவன் ஸத்பிராமணனாகாவிடினும் பிராமண கோஷ்டியினின்றும் விலக்கப்படமாட்டான். வேதமோதியிருப்பினும் ஒழுக்கத்தைக் கைவிடின்; பிராமணகோஷ்டியினின்றும் நீக்கப்படுவான். இவற்றை "ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம், இழிந்த பிறப்பாய் விடும்." (குறள்), "ஞானமா சாரம் நயவா ரிடைப்புகழும், ஏனைநால் வேத மிருக்குநெறி— தான்மொழியிற், பாவநிறை சண்டாளர் பாண்டத்துக் கங்கைநீர், மேவுநெறி யென்றே விடு." (நீதிவெண்பா) என்னுஞ் செய்யுள்களாலறியலாம். இங்கே சொல்லியவை, நமது பழைய சாஸ்திரங்களையும் ஆசாரங்களையும் நம்புகிற இக்குள்ள ஆஸ்திகர்களுக்கு ஒவ்வுமேயன்றி, நவீன ஆசாரச் சீர்திருத்தக்காரர்களுக்கு ஒவ்வா. அவர்களை நம்மாற் சீர்திருத்தவும் முடியாது.

இனி, முன்காலத்துக் கல்வியொழுக்கங்களையும் இக்காலத்துக் கல்வி யொழுக்கங்களையும் ஆராய்வோம்.—முன்னாளிலே ஏழு வயதிற் கல்விகற்கத் தொடங்கி 24 வயது வரையிற் பிரமசரியத்தை யனுஷ்டித்துக் குருகுலவாசஞ் செய்து கல்விகற்றார்கள். (48 வயது வரையிற்பிரமசரியம அனுஷ்டித்த காலமும் உண்டு.) அதற்கு மேலே இஷ்டப்பட்டபொழுது குருவின் அனுமதிபெற்று விவாகஞ் செய்து கொண்டு இல்லறத்தை நன்கு நடத்தி அரோக திடகாத்திரர்களாய் வாழ்ந்திருந்தார்கள். இதனை நமது சாஸ்திரங்களாலும் புராண இதிகாசங்களாலும் அறியலாம். அக்காலத்தில், க்ஷத்திரியர்கள் மட்டும் 16 வயதிலிருந்தே மணம் புரியும் வழக்கம் அனுஷ்டித்தார்கள். ஸ்ரீ ராமபிரானுக்கு 16 வயதிலே சீதாகல்யாணம் நடந்ததாக இராமாயணம் கூறும். தமிழ் நூல்களாகிய திருக்கோவையார் முதலிய கோவைகளிலும், தொல்காப்பியத்திலும் காந்தருவ விவாகத்திற்குக் காலவரையறை இப்பதினாறு வயதே கூறப்பெற்றிருப்பினும், தொல்காப்பியத்திலே ஏனைய மணங்களுக்கு 24-க்கு மேற்பட்ட வயதே கூறப்பெற்றிருக்கின்றது. அக்காலத்தில் அந்தணர்கள் சற்றேறக்குறைய ஏழு முதல் 24 வயது வரை

யிலுள்ள 18 வருஷகாலம் முறையாக வேதசாஸ்திரங்களைக் கற்று இல்லறத்திற் புகுந்த, பொருளாசையின்றி ஓதுவித்தல் மாத்திரிகளாயிருந்து அரசர்க்கும் குடிகளுக்கும் இதஞ்செய்தல் முதலிய லோகோபகாரமான காரியங்களையே மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்குத் தவமே தனமாம். ஏனைய வருணத்தார்களும் அவ்வாறே தத்தமக்குரிய கல்வி கற்றுத் தொழில்களை மேற்கொண்டு இனிது நடத்திவந்தார்கள். அதனால், இவ்வுலகம் செழித்து வாழ்ந்தது.

மேலும், அக்காலத்தில் இத்தேசத்திலே தமிழ்க் கல்வியும் தமிழ் மூவேந்த ரெனப்பட்ட சேரசோழபாண்டியர்களால் ஆதரிக்கப் பெற்று உன்னத நிலையை அடைந்திருந்தது. உத்தர தேசத்திலிருந்து இவ்விடம் வந்த அந்தணர் பலரும் இத்தமிழ் மொழியை முற்றக் கற்று லோகோபகாரமாக நூல்களும் உரைகளு மியற்றித் தந்திருக்கிறார்கள். ஒரு பாஷையை முற்றக் கற்றிருப்பின் மற்றொரு பாஷையைச் சற்றேறக் குறைய ஐந்து வருடத்திற் கற்றுவிடலாமாதலால், அவர்களுக்கு அது சுலபமா யிருந்தது. வடமொழியாளராகிய அவர்களே இவ்விடம் வந்து தமிழைக் கற்று அவ்வண்ணம் போற்றி யிருப்பார்களாயின், அக்காலத்தில் இங்கேயே பிறந்து வளர்ந்த தமிழர்கள் எவ்வண்ணம் போற்றியிருக்க வேண்டும்!

முற்காலத்தில் தமிழர் தமிழ்நெடுங்கணக்குப் (அரிச்சுவடி) பயின்ற பிறகு சட்டம் எழுதும் முறையிலே இரண்டெழுத்துப் பெயர், மூன்றெழுத்துப் பெயர் முதலியனவாகப் பெயர்களை யெல்லாம் எழுதப் படிக்கக் கற்று, அதன் பின்னர் ஆத்திசூடி கொன்றை வேந்தன் முதலிய இலகுவான நூல்களைத் தொடங்கி, முறையாக இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்து, தந்தமக்குரிய ஒழுக்கத்தில் நின்று, தொழில்களைச் செய்து, இகபரசாதனங்களை யடைந்து வந்தார்கள். எளிதிற் கற்று மனப்பாடம் செய்வதற்கும், அப்பாடம் என்றும் மறவாதிருத்தற்கும் ஏற்றவாறு முன்காலங்களில் அரிய பெரிய நூல்களெல்லாம் செய்யுள் ரூபமாகவே செய்யப் பெற்றன. பழைய முறைப்படி ஒருசிறுவன் தமிழ்கற்கத் தொடங்கினால் 10, 15 வருஷங்களுக்குள் நன்கு கற்றுத்தேர்ந்து

விடுவான். அதன் பின்னரும் அவன் சாஸ்திரக்கல்வி, தொழிற் கல்வி முதலியவற்றைக் கற்றுக் கற்றவண்ணம் ஒழுகுவான். ஆசிரியர்களும் பிரதிப்பிரயோஜனத்தை யெதிர்பாராமல் லோகோபகாரத்திற்காகவே யுழைத்துக் கல்விபுகட்டுவார்கள். அதனால் ஆசிரியர்க்கும் மாணாக்கர்க்கும் மனவொற்றுமையும் பரஸ்பர அன்பும் குடிகொண்டிருந்தன. ஆசிரியர் கல்வி போதிக்கும் பொழுதே ஒழுக்கத்தினையுஞ் சேர்த்துப் போதித்துக் கொண்டு வந்ததனால், அப்பொழுது இத் தமிழ்நாடானது கல்வி ஒழுக்கம் என்னும் இரண்டாலும் மேம்பட்டு விளங்கிற்று. சிற்பம் நெசவு முதலிய கைத்தொழில்களும், பலவகை வியாபாரங்களும், அயல்தேசத்தார் ஆச்சரியப்படும் வண்ணம் இங்கே நிகழ்ந்தமையால், இந்நாடு மிகவுஞ் செழிப்புற்றது.

பின்னர்க்காலத்தியிலே நம் நாட்டுக்கல்வியும் ஒழுக்கங்களும் மாறுபட ஆரம்பித்தன. பிராமணர்களிற் பெரும்பாலார் வேதமோதுதலை மறந்து அன்னியபாஷைகளைக் கற்கத்தொடங்கினர். குழந்தைகளைப் படிப்பிக்கவேண்டிய 7-வயதிலேயே விவாகஞ் செய்விக்கத்தொடங்கினர். படிப்பைப்பூர்த்தி விவாகந்தொடங்கவேண்டிய 25-வது வயதிற்குள்ளே விவாகமாகித்தீரவேண்டுமென்னும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இக்காலத்தில் ஒருவனுக்கு 25வயது ஆகிவிட்டால் அதன்பின்னர் விவாகமாதல் அரிதென்னலாம். எனவே படிப்புக்குத்தடையாயுள்ள பாலியவிவாகம் இந்நாட்டில் நிலைத்துவிட்டது. வேதமோதலையும் சாஸ்திரக்கற்றலையும் மறந்து, பாலியவிவாகஞ்செய்யவே, குருகுலவாஸம் என்பதே இன்னதென்று தெரியாது போயிற்று. இதனால் பெரியோருடைய ஸகவாஸமும் அதன்பயனாக நாம் அடையத்தக்க ஒழுக்கம் கல்வியென்பனவையும் நமக்குக் கிட்டாமற்போயின. அந்தக்காலத்தில் ராஜ ராஜாக்களுடைய பிள்ளைகளுங்கூடக் குருகுலவாசஞ்செய்து குருவை வழிபட்டுக் கல்விகற்று ஒழுக்கத்திலும் மேம்பாடுற்று விளங்கினர். இதனை இராமாயணம் முதலிய இதிகாஸ புராணங்களினாலே அறியலாம். விசுவாமித்திரர் ஜனகரது சபையிலே ஸ்ரீராமலக்ஷ்மணர்களுடைய குலமுறையைச்சொல்லிவரும்பொழுது,—

"இகுதயோடு மாசிறைஞ்சுஞ் செறிகழற்காற் றசாதனும்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வனெனும் பெயரேகாண்
உறையோடு நெடுவேலா யுபநயன விதிமுடித்து
மறையோடு வித்தியவரை வளர்த்தானும் வசிட்டன் காண்."

என்று. அவர்கள் சக்கிரவர்த்தி திருக்குமாரராயிருந்தும் குருகுலவாசஞ்செய்து வசிஷ்டமகாமுனிவரிடத்திலே கல்விகற்றதனாலுண்டாகிய பெருமையை யெடுத்து ஜனகருக்குக் கூறினர். ஜனகரும் கல்வியொழுக்கங்களினாலே மேம்பாடுற்று, 'ஞானஜனகர்' என்று யாவரும் சொல்லும்படி விளங்கினவர். அதனால் ஸ்ரீராமபிரானுடைய ஞானமுதலியவற்றையறிந்து பெண்கொடுக்கத் துணிந்தார்.

இந்தக்காலத்திலோ, இவையெல்லாம் பழங்கதையாய்விட்டன. பெண்கொடுப்பவர் பார்ப்பதெல்லாம், பையன் ஆங்கிலம்படித்திருக்கிறானா? பணவகாசுண்டா? துடுக்காக வார்த்தைபேசுகிறானா? என்பனவாதியாகச்சிலவாம். இவையிருந்துவிட்டால் (கலியாணத்திற்காக) உபநயனஞ்செய்வித்து உடனே பெண்ணைக் கொடுத்துவிடுவார்கள். இது எவ்வளவு அனர்த்தமான காரியம்!

இனி, இக்காலத்திற் கல்விகற்பிக்கப்படும் முறையைச் சிறிது கவனிப்போம். பிராமணர்கள் வேதசாஸ்திரங்களை அநுதவசெய்யினும், தருமவான்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அங்கங்கே ஏற்படுத்தியுள்ள வேதசாஸ்திர பாடசாலைகளாலும், புதுகோட்டை ஸம்ஸ்தானத்தின் ஆதரவினாலும், காருண்யம்பொருந்திய நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் ஆதரித்துவருகிற திருவையாற்று ஸம்ஸ்கிருத காலேஜ் முதலிய சிலவற்றாலும், அவை முற்றிலும் ஒழிந்துபோகாமற் சிறிது ஜீவித்திருக்கின்றன. ஆங்கிலங்கற்கத் திரவியமின்றிப் பரமஏழையாயிருக்கும் பிள்ளைகளிற்சிலரே இப்பாடசாலைகளிற் படிக்கவருபவர். இப்பாடசாலைகளிற் போஷணைகொடுத்துப்படிப்பித்தும், இப்படிப்பினாலே அதிகமான திரவியசம்பாத்தியத்திற்கு வழியின்மையால், ஏழைப்பிள்ளைகளிற்பலரும் இதற்குவாராமற் பிச்சைபெடுத்தேனும் ஆங்கிலங்கற்கப் புகுகின்றனர்.

தேசபாஷையாகிய தமிழோ, தன்னையாதரிப்பாரின்றித் தளர்கின்றது. முன்னே இதனை ஆதரித்துவந்த சைவமடாதிபதிகள்

கைவிட்டனர். பெருந்தனவந்தர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் நன்கு ஆதரிக்கவில்லை. பெரும்பாலும் தங்கள் பிள்ளைகளுக்கு எண்சுவடி வந்தால், படிப்பு முற்றிலும் வந்துவிட்டதாக எண்ணிப் படிப்பைநிறுத்தி தங்கள் தொழிலைச் செய்யும்வண்ணம் இரங்கூன் முதலிய இடங்களுக்கு அனுப்பிவிடுகின்றனர். ஒரு பாஷையேனும் பிழையற எழுதப்படிக்கப் பயிலாதவர்க்கு உலகஞானமும் தொழின்முறையும் எப்படித்தெரியும்? தொழில்செய்வதற்கும் கல்விவேண்டுவது அவசியம். கல்வியில்லாத சிலர்க்கு இலட்சக்கணக்காகப் பணம் விருத்தியாகிறதேயெனின், அது அவர்களுடைய சாமர்த்தியத்தினாலன்று. உலகத்தார் அதனை அதிருஷ்டம் என்பர். அவ்வதிருஷ்டத்தினாலே காரியகாரர்கள் புத்திசாலிகளாகவும் யோக்கியர்களாகவும் ஏற்பட்டுப் பணத்தைவிருத்திசெய்கின்றனர் என்றுசொல்லவேண்டும். அவ்வாறு விருத்திசெய்தும், உடையவர்க்கும் அவர்பிள்ளைகளுக்கும் படிப்பின்மையால் பின்னொருகாலத்தில் அத்திரவியம் துர்விநியோகப்பட்டுவிடும். கல்வியிலாதவரைக் கெடுப்பதற்குத் திரவியமும் ஒருசத்துருவாகும். பாலியத்தில் நல்ல ஸகவாஸமும் கல்வியும் ஏற்படாவிடின், பிள்ளைகள் கெட்டஸகவாஸத்தை மேற்கொண்டு, பெற்றோர்க்கடங்காமல் தங்கள் செல்வங்களையெல்லாம் வீணே செலவழித்துவிடுவர். இதனை நாம் பிரத்தியட்சமாகச் சிலவிடங்களிற் பார்க்கிறோம்.

மற்றைச்சாதியார்களும் தாய்மொழியை அநாதரவுசெய்கின்றனர். தமிழை ஆதியிலிருந்து ஒழுங்காகக்கற்பிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களைக்காணோம்: சில இடங்களிலே தமிழபிமானிகள்சேர்ந்து அத்தகைய கல்விச்சாலைகளை ஏற்படுத்தமுயலினும், அவை காலகதியினாலே மாறுபட்டு ஆங்கிலபாடசாலைகளாகப் பரிணமிக்கின்றன. ஆங்கிலபாடசாலைகளிலோ, எல்லாப்பாடங்களும் நமக்கு அன்னிய பாஷையாகிய ஆங்கிலத்தின் மூலம் கற்பிக்கப்படுதலால், நமது பாஷை அலட்சியம் செய்யப்படுகிறது. இம்முறை தகுதியற்றதென்று மேதாவிகள் பலரும் நினைத்து இதனைநீக்க முயல்கின்றனர்.

டில்லி நகரில் சென்ற திங்கட்கிழமை கூடிய வித்தியாதிகாரிகளின் கான்பரென்ஸில் காருணியம்பொருந்திய நமது ராஜப்பிரதி

நிதியாகிய லார்டு செம்ஸ்போர்டு துரையவர்கள் வித்தையிலாகா அதிகாரிகளாகிய துரைமார்களைப்பார்த்துக் கூறியுள்ள சிலவாக்கியங்கள் நம் மனத்தைப் புருக்குகின்றன. அவையாவன:—

“நம்முடையதேசத்தில் கலாசாலைகளில் நமக்கு அன்னிய பாஷையில் உயர்தரக்கல்வி கற்பிக்கப்பெறின், நாம எவ்விதம்படித்து விருத்தியடைந்திருக்கக்கூடும் என்பதைப்பற்றி உங்களைக்கேட்பதோடு என்னையே நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் இளைத்துப்போய், படிப்பேவேண்டாமென்று வெளியேறியிருப்போம். இந்தியாவில் இப்படிப்பட்ட கொடியமுறை அனுஷ்டிக்கப்பட்டுவந்தும், இந்தியச் சிறுவர்கள மனத்தைரியத்துடனும் ஊக்கத்துடனும் கஷ்டங்களையெதிர்த்துக் கல்வி பெற்றுவருவதைக் கவனிக்கும்போது என்மனம் பரவசமடைகின்றது. இந்தக்கெடுதலான முறையை இரண்டுவிதமாக நீக்கலாம்.”

என்பனவைகளே.

மேலும், ஆங்கில கலாசாலைகளிலே நமது மதாசாரங்களுக்குச் சிறிதும் ஒவ்வாத நடையுடைபாவனைகள் அனுஷ்டிக்கப் படுதலாலும், நமது மதக்கல்வி நன்கு போதிக்கப் பெறாமையாலும், மாணாக்கர்களின் ஒழுக்கம் கெடுகின்றது. இக்கலாசாலைகளிலே முன்காலத்திருந்த அன்போடுகூடிய குருசிஷ்ய முறை யின்மையாலே, உபாத்தியாயர்கள் கேவலம் சம்பளத்திற்கு வேலைசெய்கிறவர்களாக மதிக்கப்படுகிறார்கள்.

மேலே சொன்னவாறெல்லாம் நமது கல்வி ஒழுக்கம் என்னும் இரண்டுங் கெடுதலால் நம் ஆயுளுங்குறைகின்றது. நம் பாட்டனார்க்கிருந்த பலமும் ஆயுளும் பிதாவுக்கில்லை; பிதாவுக்கிருந்த அவ்வளவும் நமக்கில்லை. இக்குறைகளை ஒருவாறு நீக்கவெண்ணிப் பல பெரியோர்கள் சேர்ந்து காசியிலே, ‘இந்துயூனிவர்ஸிடி’ ஸ்தாபித்திருக்கின்றனர். அதன் பயனை இனி நாம் அறியலாம். அத்தகைய கல்வி ஸ்தாபனங்கள் பல இனி யேற்படக் கூடும். இவை நிற்க, முற்கூறிய பலகாரணங்களாலும் மது தேசபாஷையாகிய தமிழின பெருமை குன்றினும், அது செய்த தவப்பயனாக அவதரித்த வள்ளலாகிய ஸ்ரீமான் பாண்டித் துரைத் தேவரவர்கள் இற்றைக்குப் பதினைந்து வருஷங்களின் முன்னே ஸ்தாபித்த மதுரைத் தமிழ்ச் சங

கத்திலும், சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் முதலிய மஹோபகாரிகள் சிலராலும், அது இன்னும் ஜீவித்திருக்கின்றது. அவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை இப்பொழுது பரிபாலித்துவருகிற மகான்களுக்கும் இத்தமிழுலகம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக் கலாசாலையிலே சிலபிள்ளைகளுக்கு மாத்திரம் மேற்படிப்புச் சொல்லிக்கொடுக்கப்படுவதலால், ஆரம்ப முதலே தமிழ்க் கல்வியை முறைபாகப் புகட்டக்கூடிய கல்விச்சாலைகள் பல நமது தேசமெங்கும் ஏற்படவேண்டும். அவற்றிற் படிக்கும் பிள்ளைகள், மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்பரீக்ஷைகளுக்கும் மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் தமிழ்ப் பட்டப் பரீக்ஷைகளுக்கும், போகத்தகும் வண்ணம் அவர்களுக்கு ஆங்கிலமும் உபபாடமாகக் கற்பிக்கப் படவேண்டும். உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள நவீனக் கொள்கை (அலட்சியபுத்தி) மாறிப் பழைய குருசிஷ்யமுறை ஏற்படவேண்டும். இவையெல்லாம் சித்திக்குமவண்ணம், இச்சபையாரும் இது போலவே பலவூர்களிலும் இப்பொழுது ஏற்பட்டுவருகிற மற்றைச்சபையார்களும், ஊக்கத்துடன் முயலவேண்டும். அவ்வாறு முயன்றால், நமது தேசத்துக் கல்வியும் ஒழுக்கமும் மறுபடியும் மேன்மையடைந்து விளங்கும் என்பது நிச்சயம். அவ்வாறு மேன்மையடையும்பொழுது தமிழ்ச் சர்வகலாசங்கமும் ஏற்படக்கூடும். நம் எண்ணங்களெல்லாம் நிறைவேறும் வண்ணம் ஈசன் திருவருள் பெருகுக. இவ் வைசிய சிவானந்தசபை நீடுவாழ்க.

---

## விடாமுயற்சி.

விடாமுயற்சி யென்னும் இத்தொடர்மொழி ஒருவன் தான் கருதிய காரியம் முடியுமளவும் அதை [illegible]யும் பொருட்டு இடைவிடாது ஊக்கத்தோடு செய்யுந் தொழிலை[illegible]

பொருள்படும். அத்தொழில், தான் பெற்ற நற்பொருள் தன்னை விட்டகலுவதாயிருந்தால் அதனையகலாதிருக்கும்படி செய்தற்கண்ணும், புதிதாகப் பெறவேண்டிய சிறந்தபொருளைப் பெறுதற்கண்ணும் நிகழும். இங்ஙனம் நிகழுதல், ஜீவகோடிகளாகிய நம்மெல்லோரிடத்தும் ஒப்பமுடிந்ததேயெனினும், இடையே அக்காரியங்கள் முடிவதற்குத்தடங்கல் எவையேனும் ஏற்படின், அவற்றிற்கெல்லாம் மனம் தளராது, அவற்றையெல்லாம் பொறுத்து, மேற்சென்று காரியங்களை முடித்தல் சிலருக்கே முடிவதாகும். இத்தகைய சிலரே எல்லா நலன்களும் பெறுதற்குரியார். இதுகருதியே "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" எனவும், "முயற்சி திருவினையாக்கும்" எனவும் பெரியோர் கூறியிருக்கின்றனர். சரீரப்பிரயாசைக்குப் பயப்படுபவரும், பசியைப் பொறுக்கவேண்டிய சமயத்து அதனைப்பொறுக்கும் ஆற்றலில்லாதவரும், ஏது எப்படியானாலும் நித்திரைக்குச் சிறிதும் பங்கம்வரக்கூடாது எனக்கருதுபவரும், பிறர் தீங்குசெய்வாராயின் அதற்கு என்செய்வது எனக் கவலைப்பட்டு அத்தீமைக்கு மிகுதியும் அஞ்சுபவரும், நல்லகாரியம் ஒன்றைச்செய்ய நேரும்பொழுது 'இது காலமல்லாதகாலம், பிறகு பார்த்துக் கொள்வோம்' என்று அதைச்செய்தற்குப் பின்வாங்குபவரும், அறிவில்லாத சிலரால் செய்யப்படும் பரிஹாஸம் சிறுபொழுதே நிகழ்வதாயிருக்க அதனுக்கிரங்குவோரும் ஆகிய இவரெல்லாம் விடாமுயற்சியைக் கைக்கொண்டு கருதியகாரியங்களைச்சாதிக்கும் ஆற்றலில்லாதவராவர் என்பது பெரியோர்களுடைய உண்மையான அபிப்பிராயமாகும். இனி, நாம் கருதிய நற்காரியத்தை முடிக்கும் ஆற்றலுள்ளவர் யாவரெனின், "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி-யருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்" என்ற பெரியாருபதேசத்தைப் பின்பற்றி நடப்பவரேயாவரெனக.

ஆனால், "விதியினை யாவரே வெல்லு நீர்மையார்", "வருந்தியழைத்தாலும் வாராத வாரா", "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது", "விதியின் பயனேபயன்" என்பனவாதியாக வரும்வாக்கியங்கள் ஊழின்சிறப்பை வலியுறுத்

ஆதலால், முயற்சியாலாம் பயன் ஒன்றுமில்லை யென்பர் ஒருசாரார். அவர்கள், ஸ்ரீமார்க்கண்டேய மஹாரிஷி, தமக்கு வயது பதினாறே யென்பதாக விதிக்கப்பட்டிருக்கவும் தமது உலையாமுயற்சியாற் பக்திமுதிர்ச்சியுண்டு, கடவுள் வழிபாடென்னும் பெறலருந்தொழில் கொண்டு, தம் ஊழையும்புறங்கண்டு, உயிரைக்கொண்டுபோவதற்கு வந்த யமனையும் உதையுண்டு செல்லும்படிசெய்து, என்றும் பதினாறுவயது இளைந்து வாழும்பேற்றைப்பெற்றனர் என்னும் விருத்தாந்தத்தையுற்று நோக்கவேண்டும். மேலும் உத்தமமான கற்பைத்தாங்கி மேம்பட்ட சாவித்திரி என்னும் பெண்மணியின் சரித்திரமும் உற்றுநோக்கற்பாலதாம். அது யாதெனில், சத்தியவான் என்ற பெயரால் வழங்கப்படும் சித்திராசுவனுக்குக் கலியாணமான ஒருவருஷத்திற்கெல்லாம் நிச்சயமாக இறப்பு வருமென்பதனை நாரதமஹாரிஷியால் உணர்ந்தும், சாவித்திரியானவள் அச்சித்திராசுவனையே மணக்கவிரும்பி மணந்தனள்; மணந்து ஒருவருஷம் முடிவதற்கு நாலுநாளிருக்க, தான் அன்னபானாதி ஆகாரங்களின்றி உறக்கமற்று மனதை ஒருநிலைப்படுத்திக் தன்கணவன் நீண்டஆயுள் பெறுதற்கான விரதமதைக்கொண்டாள். நாலாநாள் யமன்வந்து சித்திராசுவன் உயிரைத்தன் வழக்கப்படி பற்றிச்செல்ல, அவனை விடாளாய் இவளும்பின்பற்றிச்சென்றனள். யமன் இவளைப்பார்த்து, வழியின் கடுமையைக்கூறி இவளை மட்டிலும் திரும்பிப்போம்படி சொல்ல, இவள் கணவனுயிரை மீட்டாலன்றிப் போகேனென உறுதிபூண்டு அவனைப்பின்றொடர்ந்து, அவனால் முதலாவதாக-குருடராய்க்கிடந்த தன்மாமன் மாமியிருவரும் கண்கள் பெறும்படியாகவும், இரண்டாவதாக-முன் மாமனிழந்த இராஜ்யத்தை மீட்டும் அடையும்படியாகவும், மூன்றாவதாக- புத்திரபாக்கியமில்லாத தன் தந்தை நூறு புத்திரர்களைப் பெறும்படியாகவும் மூன்றுவரங்களைப் பெற்றும் பின்னரும் விடாது தொடர்ந்து சென்றாள். அதைக் கண்ட யமன் இவள் விடாமுயற்சிக்கு மிக மகிழ்ந்து, 'இனி எவ்வரமாயினுங்கேள், தருவேன்' என்றுகூற, சாவித்திரி தேவியானவள் இதற்குமுன் மூன்று வரந்தரும்போதெல்லாம 'உன் கணவனுயிரைத் தவிர வேறு எதையுங்கேள்' என்றயமன் வாயினால் 'கணவனுயிரைத்

தவிர' என்றவார்த்தைகள் நீக்கப்பட்டு, 'எவ்வாறாயினும்நீ கேள் தருவேன்' என்று சொல்ல நேர்ந்த என்பாக்கியமே பாக்கியம் என்று முன்னையினும் மிக முகமலர்ந்தவளாய், "என் கணவனுயிரைத் தர வேண்டும்; இவ்வரமே யான் தங்களை வேண்டுவதாகும்" என்றாள். யமனும், இவள் விடாமுயற்சிக்கும் பதிபக்திக்கும் இரங்கி அவ்வரமே தந்து, "உத்தமியே! உன் கணவன் நாலாயிரம் வருடம் சுகஜீவியாய் உலகத்தை அரசாண்டு நூறுபுதல்வர்களையும் பெற்றுப் பின்னர்ப் பேரின்பப்பெருவாழ்வும் அடைவன்" என அநுக்கிரஹித்துச் சென்றனன் என்பதாம். இவற்றால் "விதியின பயனே பயன்; அன்றி, விடாமுயற்சியாற்கிடைக்கும் விசேஷமான பயன் கிடையாது" என்று வாதிக்காமல் யாவரும், "தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன், மெய்வருத்தக் கூலி தரும்" என்றும், "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித், தாழா துஞற்று பவர்" என்றும் வருபவற்றி னுண்மைப் பொருளுணர்ந்து இடையறாத முயற்சி பூண்டால், எல்லா நலனும் எய்துவர் என்பது பெறப்படும்.

நிற்க, ரயில் தந்தி ஆகாயவிமானம் முதலான ஜனசௌகரியப் பொருள்கள் சோம்பேறிகளாற் கண்டு பிடிக்கப் படவேயில்லை; விடாமுயற்சியுள்ள மஹாமேதாவிகளாலேயே கண்டுபிடிக்கப்பட்டன. "ஆக்க மதர்வினாய்ச் செல்லும் அசைவிலா, ஊக்க முடையா னுழை" என்னுந் தேவர் வாக்கு ஈண்டுச் சிந்திக்கத் தக்கதாகும். "முயன்று வினை யைந்-தலைநாக நன்மணியும் பெறலாமித் தரணியிலே" என்பதும் விடாமுயற்சியின் பயனைத் தெரிவிப்பதாகும். இன்னும் எத்துணை விரித்துக்கூறப்புகினும், இவ்விஷயம் அத்தனைக்கும் இடங்கொடுக்குமாதலின் விரிவஞ்சி இதனை இம்மட்டோடு நிறுத்தி, முடிவாக நம்மெல்லோருக்கும் நல்லவிஷயங்களில் விடாமுயற்சி அவசியம் வேண்டற்பாலதென்பதனை மட்டும் பன்முறையும் வற்புறுத்திக்கூறி இதனைப் பூர்த்தி செய்கின்றேன். இதுவரை கூறியவற்றுள் நேர்ந்த பிழைகளைப் பொறுக்குமாறு வேண்டுகின்றேன்.

மணிவாசகன்.

# விவசாயம்.

## சப்பாத்துக்கள்ளி அல்லது நாகதாளியின் சில உபயோகங்கள்.

இக்கள்ளியானது நமது தேசத்தில் பலபாகங்களிலும் படர்ந்து ஏராளமான நிலங்களை மூடிக்கொண்டிருப்பதால், இதைக் கிருஷிகர் அவர்களுக்குக் கெடுதியை உண்டாக்கும் பொருட்டு ஓர் சாபத்தினால் உண்டானபூண்டென்று எண்ணுகிறார்கள். சில இடங்களில விவசாயத்துக்கு லாயக்கான நிலத்தில், இதுபாவி மூடிக்கொண்டிருப்பதால் அந்நிலங்கள் கிருஷிக்கு உபயோகமற்றதாய்த் தற்காலத்தில் ஆய்விட்டன. அநேக கிராமங்களுக்குச் சமீபமாயுள்ள குத்துச்செடிகள்வளரும் குறுங்காடுகளில், இச்செடிகளுக்கு ஊடேயிருக்கும் காலி நிலங்களில், ஜனங்களுக்கு பிரயோஜனப் படக்கூடிய புல் பூண்டு செடிகள் முதலியவைகளும் அக்காலி இடங்களில் முளைக்கா வண்ணமாய் இதுவளர்ந்து, மூடிக்கொண்டிருப்பதால், அவ்விடங்கள் உபகாரப்படாமலிருக்கின்றன. அநேககிராமங்களில் வழி பாட்டைகளுக்குச் சமீபமாய் இதுபடர்ந்து வருஷா வருஷம் ஜாஸ்தியாகிக் கொண்டு வருவதால், இப்பாட்டைகளும் வழிகளும் அநேகமாய் விஸ்தீர்ணத்தில குறுகிக்கொண்டே வருகின்றன. புறம்போக்கு நிலங்களில் இவைகள் ஏராளமாய் வளர்ந்து மூடிக்கொள்வதால், அந்நிலங்கள் எந்த வேலைக்கும் பிரயோஜனமற்றுப் போகின்றன. இந்நாகதாளிப் புதர்களுக்கு மறைவில் போய் ஜனங்கள் மலஜலங்கள் கழிப்பதால், அவைகள் இதை ஜாஸ்தி வீரியமாய் வளரச் செய்வதோடு அக்கிராமத்திற்கு சுகாதாரக் குறைவு உண்டு பண்ணுகிறது. ஆகையால் இந்நாகதாளிப் பூண்டைக் கிராமாந்தரங்களிலிருந்து எப்படி நிர்மூலமாக்குவதென்பது, கிருஷிகர் ஆலோசனைசெய்து கவனிக்க வேண்டிய விஷயங்களில் ஒன்றாயிருக்கிறது. இக்குமங்கும் இவ்விராஜதானியில் சில இடங்களில்

சில தாலுகா போர்டார்களும், ஜில்லா போர்டார்களும் இப்பூண்டை நிர்மூலப்படுத்தப் பிரயத்தனங்கள் செய்து கொண்டிருந்த போதிலும், எல்லாக் கிராமங்களிலிருக்கும் விவசாயிகளும் இவ்விஷயத்தில் ஒத்தாசை செய்தாலொழிய, இதை விசேஷமாய்த் தொலைக்க சாத்தியப் படமாட்டாது.

கோயம்புத்தூர் ஜில்லாவின் சிலபாகங்களில் இந்நாகதாளியை அப்புறப்படுத்தி மண்ணுடன் கலந்து மக்கவைத்து எருவுக்கு லாயக்காகும்படிச் செய்தபின் கம்பு சோளம் கேழ்வரகு முதலிய பயிர்களுக்குப் புன்செய்களிலும், தோட்டக்கால் நிலங்களில் நாகி மிளகாய் புகையிலை கோதுமை வாழை கரும்பு முதலிய இறவைப் பயிர்களுக்கும் எருவாய் உபயோகப் படுத்துகிறார்கள். ஆனால் எல்லாக் கிருஷிகரும் இம்முறையைக் கையாடுகிறதில்லை. கிருஷிகர் பயிரிடும் நிலங்களுக்குள் மூலைமுடக்குகளில் இந்நாகதாளிவளர்ந்திருந்தாலும் அல்லது வெளியிலிருந்து தங்கள் நிலத்துக்குள் பரவி வந்து கொண்டிருந்தாலும் அச்சமயங்களில் தான் இதை அநேகமாய் அப்புறப்படுத்தி மண்ணுடன் மக்கவைத்து எருவாய் உபயோகிக்கப் பிரயத்தனப் படுகிறார்கள். சிலகிருஷிகர் தங்களுடைய நிலங்களுக்குச் சமீபத்தில் சப்பாத்துக்கள்ளி ஏராளமாய் அகப்பட்டால் அதைவெட்டிஎருவுக்கென்றே சேகரித்து மக்கவைக்கிறார்கள். ஆனால் இந்த வழக்கம் எவ்வளவு தூரம் கையாட வேண்டுமோ அவ்வளவு தூரம் கையாடப் படவில்லை. என்றாலும், கிருஷிகர் தங்களுடையநிலங்களைச் சீர் திருத்துவதற்காக நாகதாளிப் புதர்களுக்குக் கீழே படிந்திருக்கும் மண்ணை (கள்ளிமண்ணை) வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய் நிலங்களில் கொட்டும் வழக்கத்தைக் கையாடுகிறார்கள். புறம்போக்குகளிலும் குளக்கரைகளிலுமுள்ள இம்மண்ணை அடித்துக் கொண்டுபோக மண்கிரயம் கிடையாது. மண் அடித்துக்கொண்டுபோகவேண்டிய இடம் அரைமைலுக்குள்ளிருக்குமாகில் நாகதாளிப் புதர்களை வெட்டி அப்புறப்படுத்தி விட்டு, அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் மண்ணை வெட்டி அப்புறப் படுத்தி, வண்டியில் ஏற்றிக்கொண்டு போவதற்கு வண்டி ஒன்றுக்கு அணா 2 தான் செலவாகும். இப்போது கூலி

யாட்களுக்குக் கூலி அதிகரித்துக் கொண்டுவருவதால் ஒரு வண்டிக்குக்கூலி ஜாஸ்தியாகிக் கொண்டே வருகிறது. நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் மண்ணானது நிரம்ப எருச்சத்துள்ளது. ஏனென்றால், காற்றில் அடித்து வரும் இலை சருகு முதலியவைகளும் மற்ற இந்திரியவஸ்துக்கள் அடங்கியபொருள்களும் காற்றினால் அடிபட்டுப் புதரினால் தடுக்கப்பட்டு இவைகளின் அடியில் மக்குவதனால், எருச்சத்து ஜாஸ்தியாகிறது. நாகதாளியிலேயே நூற்றுக்கு 60 பாகம் இந்திரிய வஸ்து இருக்கிறதென்று டாக்டர் லெதர் துரையவர்கள் ரசாயனப் பரிசோதனைசெய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வளவு இந்திரிய சத்துள்ள நாகதாளியை அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் எருச்சத்து அடங்கிய மண்ணுடன் சேர்த்து மக்கவைத்தால், அப்படி மக்கின பொருளில் எருச்சத்து ஜாஸ்தியிருக்குமென்பதில் சந்தேகமில்லை. நமது நிலங்களில் அநேகமாய் இந்திரிய வஸ்து குறைந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும். இப்பேர்ப்பட்ட நிலங்களுக்கு நாகதாளியை அதன்கீழ் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் கூட்டி மக்கவைத்து அதை எருவாய் உபயோகப்படுத்தினால், அதிக அநுகூலத்தை உண்டாக்கும். இப்படி நாகதாளியை மண்ணுடன் மக்கவைத்து எருவாக உபயோகிப்பதால், கிருஷிகருக்கு இலேசாய் எரு அகப்படுவதுடன் அநேக விஷயங்களில் தற்காலம் கெடுதியே உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் இந்த சாஜுலப் பூண்டும் தொலைய ஏதுவாகிறது.

நாகதாளியை மக்கவைத்து எருவாக்க அடியில் சொல்லும் முறைகளைக் கையாடிச் சித்திபெறலாம்:—

(1) ஆறு அடி அகலமும் 3 அல்லது 4 அடி ஆழமும் நமக்கு வேண்டிய அளவு நீளமும் உள்ள பள்ளங்களை சால் மழைகளுக்குப் பின்னும், காலமழைக்கு முன்னும் தோண்டித் தயாராய் வைத்திருக்கவேண்டும். மழைக்காலங்களில கிருஷிகருக்கு வேலை ஒழிந்திருக்கும் சமயங்களில, நாகதாளிப் புதர்களைவெட்டி அப்புறப்படுத்தி இக்குழிகளில நிரப்பி, இக்குழிகளிலிருந்து எடுத்தமண்ணால் மூடிவிடவேண்டும். சில நாளைக்குள் குழிகளுக்கு உள்ளிருக்கும் சப்பாத்துக்கள்ளி சற்று மக்கி அழுக்கும். அக்காலத்தில் அப்

புறப்படுத்திய சப்பாத்திக்கள்ளிகளின் அடியிலிருக்கும் மண்ணை வெட்டி, இந்த அழுகிய இடங்களில் போட்டு நிரப்பவேண்டும். நல்லமழைகள் பெய்யும் இடங்களில் இது ஒரு வருஷத்துக்குள் மக்கியெருவாகும். ஒரு வருஷத்துக்குள் சப்பாத்திக்கள்ளிகளில் இருக்கும் முட்கள் மக்கி இருக்காவிட்டால், இன்னொரு வருஷம் அப்படியே வைத்திருந்தால் அம்முள்ளுகள் நன்றாய் மக்கிவிடும்.

(2) மழைகள் குறைவாய்ப்பெய்யும் இடங்களில் கிருஷிகருக்குச் சாவகாசமிருக்கும்போதெல்லாம் நாகதாளியை வெட்டி எங்கெங்கே சௌகரியமாயிருக்குமோ அவ்விடங்களில் குவித்துக்காய விடவேண்டும். அதன்மேல் காய்ந்த புல் சருகு கூளம் முள் முதலியவைகளை குவியல்கள்மேல் பரப்பி நெருப்புவைத்தால் முட்கள் அநேகமாய்ப் பொசுங்கிப்போகும். இச்சமயத்தில் இக்குவியல்களின்மேல் நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்த மண்ணைக் கொண்டுவந்தாவது, அல்லது அக்கம்பக்கத்தில் அகப்படக்கூடிய மண்ணைச் சேர்த்தாவது மேலேபோட்டுமூடி உள்ளிருக்கும்வஸ்து மக்கும் வரை வைத்திருந்தால், இரண்டு மூன்று வருஷங்களில் நிலங்களுக்கு எருவாக உபயோகிக்கக்கூடிய ஸ்திதியில் வந்துவிடும்.

(3) மேற்சொல்லிய இரண்டு விதங்களும் செய்யப்போதிய இடமில்லாவிட்டால், மாடுகள் கட்டிச் சுண்ணாம்பு அரைக்கும் ஆலைகளைப்போல் அமைத்து, சுண்ணாம்புக்குப் பதிலாய் நாகதாளியைப் போட்டுச்சுண்ணாம்பைப்போல அரைத்தால், நாகதாளியில்தண்ணீர் அதிகமாயிருப்பதால், அரைமணிநேரத்துக்குள் நன்றாய் அரைபட்டுக்கொளகொளவென்று ஆகிவிடும். அதை மண்வெட்டிகொண்டு அப்புறப்படுத்திக் குழிகளில்போட்டு அதன்மேல் மண்கொட்டிமூடி வைத்திருந்தால், ஜல்தியாய் மக்கி எருவாய்விடும். முட்களும் நீட்டமாய் நிற்காமல் படுத்திருக்குமாதலால், அவைகள் தைக்காது. இப்படித் தயார்செய்தால் ஆறுமுதல் எட்டுமாதத்துக்குள் இது எருவாய் உபயோகிக்க லாயக்காகிவிடும்.

மேலேசொன்ன உபயோகத்தைத் தவிர நாகதாளி வேறுவிதமாயும் உபயோகமாகும். நாகதாளியை வறுத்து வேகவைத்து அப்

புறப்படுத்தியபின் இருக்கும் தண்ணீரைச் சுண்ணாம்புடன் கலந்து வெள்ளையடிக்க உபயோகப்படுத்தலாம். இப்படிவெள்ளையடித்த சுண்ணாம்பு சுவர்களில் ஒட்டிக்கொள்ளுகிறதேதவிர மேலே ஒட்டுகிறதில்லை. ஒருபானை அல்லது சட்டியில் நாகதாளியை சிறுசிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு அது நிறையத்தண்ணீர் ஊற்றிச் சுமார் 3 மணிநேரம் வரையில் நன்றாய்க்கிளறி வேகவைத்து, அது ஆறினபின், அதிலிருக்கும் வெந்த தண்ணீரை வடிகட்டி, வெள்ளையடிக்கத் தயார்செய்திருக்கும் சுண்ணாம்பு அல்லது கோபிக்கு 150 பாகம் சுண்ணாம்பு ஜலத்துக்கு நாகதாளியின் வெந்து வடிந்த தண்ணீரை ஒருபாகம் ஊற்றிக்கலந்து வெள்ளையாவது அல்லது கோபியாவது அடித்தால், அவைகள் ஜாஸ்திஸ்திரமாயிருப்பதோடு சுவரிலும் நன்றாய் ஒட்டிக்கொள்ளுகிறது. சுவர்களில் ஜனங்கள் சாய்ந்தாலும், அது துணி முதலியவைகளில் ஒட்டிக்கொள்வதில்லை. சாதாரணமாய்ச் சுவர்களின்பக்கத்தில் உட்கார்ந்து, அதிற்சாய்ந்துகொள்ளும் வழக்கமுடைய நமது இந்திய வீடுகளில், புதிதாய் வெள்ளையடித்திருக்கும் சுவர்களின்மேல் சாய்பவர்களுடைய துணியிலாவது உடம்பிலாவது ஒட்டாமலிருப்பது ஒரு பெரிய அனுகூலம்.

J, செல்வரேங்க ராஜு.
விவசாய உதவி டைரக்டர்.
செண்ட்ரல் டிவிஷன்.

---

குறிப்பு:—இவைகளை எருவாக உபயோகிப்பதில் தென்னம்பிள்ளைகளை வைக்கிற குழிகளில், மணலுடன் கலந்து நீர் அருந்தலாக்வுள்ள விடங்களில் வைத்தால், தென்னம்பிள்ளைகள் பட்டுப்போகாமல் ஈரத்தை வேர்களில் காத்து நன்றாய்க் கிளம்பும். இதை மன்னார்குடி தாலூகாவிலுள்ள ஆடுகள் தின்று ஜீவிக்கின்றன. மேற்படி ஆடுகளுக்கு அங்கு நல்ல புல் எப்பொழுதும் கிடைப்பதில்லை. சப்பாத்துக்கள்ளியில் இருக்கும் முள் அதன் வாயில் குத்தியும் அதைப்பாராட்டாது அந்த வாயில்லா ஜீவன் இதையே ஜாஸ்தி ஆகாரமாக உட்கொள்வதை நாம் அநேகதடவைகளில் பார்த்திருக்கிறோம்.

க. பி,

# ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் சரித்திரம்.

பக்திரஸம் பெருகப் பெருகப் பாடப்பெற்றனவாகி, இன்றைக்கும் நந்தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலாரையும் சிவபிரானுடைய திருவருளுக்குப் பாத்திரராக்குவிப்பன, தமிழ் வேதங்களான தேவாரங்களேயாகும். இவை தேவதேவனாகிய பரமேசுவரனுக்குப் பூமாலைகள் போலணிவிக்கப் பெற்ற பாமாலைகளாகத் தொடுக்கப்பெற்றனவாகலின், அப்பெயர் பெற்றன போலும். இத்தேவாரங்களே நந்தமிழ் நாட்டிலும்மனைய நாடுகளிலும் சிவபக்தியைப் பரவச்செய்து சைவமதத்தினை வளர்த்துக் கொண்டிருக்கின்றனவென்று சொன்னாலும் இழுக்காகாது என்று எண்ணுகிறேன். இவ்வரிய பெரிய அருட்பாக்கள் நமது ஸமய குரவர்களால் பாடப்பெற்றனவேனும், அவை ஒருங்கு சேரத் திரட்டப்பெற்று அளிக்கப்பெற்றிராவிடின், அவற்றின்பெருமையையும் அருட்பெருஞ்சோதியின் கருணையையும் நாம் அறிந்துகொள்வது துர்லபமாகவே முடிந்திருக்கும். ஆகலின், அவற்றைத் திரட்டிக் கொடுக்கும் செயலான இப்பேருதவியைச் செய்துபார்ந்தவராகிய பெரியவரது சரித்திரத்தையே இங்கு எழுத எடுத்துக்கொண்டிருக்கிறேன். இவரே நமதுநம்பியாண்டார் நம்பிகள். இவர்கள் தேவாரப் பாக்களாகிய தமிழ் வேதங்களைத் தொகுத்தமை பற்றி, இவர்களுக்குத் தமிழ் வ்யாஸர் என்னும் ஒரு அருமைப் பெயரும் வழங்கி வருகின்றது. இவரைப்போலவே வைணவத்திலும் ஸ்ரீமந் நாதமுனிகள் என்பார் ஆழ்வார்களது ப்ரபந்தங்களைத் தொகுத்துள்ளார்கள்.

உலகில் உத்தமமான சாஸ்திர உண்மைகளென்று கொண்டாடப்பட்டுவரும் அரிய பெரிய விஷயங்களையெல்லாம் ஆராயப் புகுந்தால், அவைகள் ஆச்சரியமானவும் உலகவிசித்திரமானவுமான ஆரம்பங்களையே கொண்டிருக்க நாம் அறிகிறோம். பெரிய பெரிய நதிகளெல்லாம் ஆச்சரியமான சிறிய இடங்களிலிருந்து தோன்றிப் பிறகு, லோகபாவனமான பெரிய தோற்றத்தை யடைந்திருப்பன போலவே, இவ்விஷயங்களும் இருக்கின்றன. அப்படியே நம்முயிர்க்குறுதிதரும் அருமைத்தேவாரத் தொகுப்பினது பிறப்பும், ஒரு சிறு பிராமணச் சிறுவராகிய நம்பியாண்டார் நம்பிகளிடமிருந்து வெளிப்பட்டிருக்கக் காண்கிறோம். பூஜாஸாதன முறையாகிய சைவமதத்தை அவலம்பித்துப்பார்த்து, திருவாரூரிலிருந்து ஆண்டுவந்த ஸ்ரீ அபயகுலசேகரசோழன், பரமசிவ பக்தியில் ஆழ்ந்து ருசித்துச் சித்தத் தாமடைந்துள்ள இன்பத்தையும் முக்திப்பேற்றையும் உலகினர்க்குக் கைம்மாறு வேண்டாதுதவினவர்களாகிய ஸ்ரீ அப்பர் சுந்தரர் சம்பந்தர் ஆகிய பெருவள்ளலார்களுடைய அருமைத் திருவாக்குகளினின்றும் எழுந்த பக்திரஸப்பாடல்களின் சிலவற்றைத், தமது ஸபைக்கு விஜயஞ்செய்யும் பல சைவத் திருவாளர்களினுடைய வாக்கிலிருந்து கேட்டுக்கேட்டானந்தித்துக் கொண்டிருந்தான். ஒருநாள் அவற்றையெல்லாம் ஒருசேரத் தொகுக்கவேண்டும் என்ற ஆசை அரசனுக்குதித்தது. பிறகு, தன்னாலியன்றவரையில் முயன்றும் அது கைகூடாமற் போயிற்று. அதனால் அரசன் மனோவியாதிகொண்டு மயங்கினவனாகவே இருந்தான். அவனது மயக்கத்தைத் தீர்த்து மனோவ்யாதியைப் போக்கினவர் நமது நம்பிகளேயாவர். அவர்களைப்பற்றித் தெரிந்தவளவில் சுருக்கமாக இங்கே குறிக்கத்தொடங்குகின்றேன்.

நம்பிகளது குடும்பவரலாறும் பால லீலைகளும் நமக்கு அதிகமாகத் தெரியாவிடினும், அவரது இளம்பிராயத்தில் நடந்துள்ளதோர் அற்புதச்செயல் நமக்குத் தெரிந்து கொள்ளக்கிடைத்திருக்கிறது. இஃது ஒன்றே இவரது சரித்திரத்திலிருந்து அறிந்து கொள்ளவேண்டியவைகளில் முக்கியமானதாகும்.

இவர்கள் ஆதிசைவர்களுடைய குலத்தில் உற்பவித்தவர்கள். இவர்களது பிதா, நாரையூரில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளி

பிருக்கும் பொள்ளாப்பிள்ளையார் என்று திருநாமம்பூண்ட, ஸ்ரீ கணேசப் பெருமானை அர்ச்சித்துக் கொண்டுவரும் பாக்கியம் பெற்றவர். இந்தப்பாக்கியம் இவருக்குப் பரம்பரையாகக் கிடைத்த தொன்றாகும்.

நமது நம்பிகளின் உலகமுறைப்படி உபநயனவிதியினால் பரிசுத்த ராக்கப்பட்டிருந்தபோது, ஒருநாள் பிதா, தான்வழக்கப்படிச் செய்யவேண்டிய கணேச பூஜையைச் செய்யும்படித்தமது புத்திரருக்குக் கட்டளையிட்டுத், தாம் அயல் கிராமத்திற்குச்சென்றார். பிறகு நம்பிகள் மிகக் களிப்புடன், அந்தக்கைங்கரியத்தைச் செய்வதாக ஒப்புக்கொண்டு, தமது அந்தப்பால்ய வயதிலும் யாவரும் ஆச்சரியப்பட, மிகுந்த பக்தி விநயத்துடன் நிவேதனம் முதலியவற்றைத் திருக்கைகளிலேந்திக்கொண்டு கோயிலுக்குட்சென்று, விதிப்படி வணக்கம்புரிந்து, பூஜையை நியமத்துடன் செய்து முடித்தார்கள். பூஜை முடிந்தவுடன், தாம் கொண்டுவந்திருந்த நைவேத்யங்களை ஸ்வாமியின் திருமுன்வைத்து, அவற்றை யமுது செய்தருளும்படி மிகுந்த பக்தியுடன் வேண்டினார்கள். கணேசப்பெருமான் வாளாவிருந்தனர். நம்பிகளோ, பின்னும் பின்னும் வேண்டினர். ஸ்வாமியோ வழக்கமில்லாதவர் போலவே, நம்பிகளது பிரார்த்தனையைத் தலைக்கட்டிக்கொடாமலே இருந்து விட்டார். நம்பிகள் வருந்தி, 'தமது பிராயச்சிறுமையால் தம்மைப் பாத்ரமல்லாராக ஸ்வாமி நிராகரித்து விட்டார்' என்று எண்ணியெண்ணி மிகவும் கவன்று, பொறாதவர்களாகி, 'ஸ்வாமி பூஜைக்கு அர்ஹனல்லாத நான், இருந்தென்ன இறந்தென்ன'வென்று தீர்மானித்து, தமக்கு நேரிலிருந்த ஒரு கற்றூணில் தமது சிரஸினை மோதிக்கொள்ள ஆரம்பித்தார்கள். உடனே ஸ்வாமி, அவருடைய பக்திக்கும் உறுதிக்கும் கட்டுப்பட்டவராகிப் பிரஸந்நராய், அவரது விருப்பப்படியே அவர்கொண்டுவந்து சமர்ப்பித்திருந்த நைவேத்யங்கள் யாவற்றையும் உட்கொண்டு அவரை மகிழ்வித்தார்.

நம்பிகள், மிகவும் ஸந்தோஷங் கொண்டு, அன்றுமுதல் பரிசுத்தமான நைவேத்யங்களை ஸ்வாமிக்குத் தவறாமல் ஸமர்ப்பித்து வந்து, அவரது பரமகருணைக்குப் பாத்திரராகித் தாமும் பக்தியில்

மூழ்கித்தம் உடல் பொருள் ஆவி மூன்றும் அக்கணேசப் பெருமானதெனவே நினைத்து, அவரைத்தமது பரமாசாரியனாகக் கொண்டு, அவரது திருவருளால் யாவும் கற்க முயன்றார்கள். ஸ்வாமியும், ஸம்மதி கொடுக்க, அன்றுமுதல் நம்பிகள், பள்ளிக்குப் போவதை நிறுத்தி விட்டார்கள். யாவரும் ஆச்சரியப் படும்படி நமது நம்பிகள் வெகு விரைவில் பலசாஸ்த்ர பாரங்கதராக விளங்கினார்கள். இந்த விதமான படிப்பின் முதிர்ச்சியும் பக்தியின் பெருக்கமும் தோன்றவே, அப்போது அவர்கள், ஸ்வாமி மேல் ஸ்தோத்ரமாக முப்பது செய்யுட்களடங்கிய இரட்டைமணிமாலை என்னும் க்ரந்தத்தைச் செய்தருளினார்கள்.

இவர்களது ஆச்சர்யகரமான இச்செயல்களெல்லாம், அப்யகுல சேகரசோழனது செவிகட்கெட்ட, தான் மிகுந்தபக்திமானாயினும், அந்தஆச்சர்யச்செயல்களில் நம்பிக்கைகொள்ளாதவனாகி, ஒருமுறை பரீக்ஷிக்க வேண்டுமென்றே, தான் நாரையூருக்கு நேரேசென்று நம்பிகளைக்கண்டு, தனக்கு நேரிலே ஸ்வாமியைநைவேத்யஸ்வீகாரம் செய்யச் செய்யும்படி கேட்டுக்கொண்டான். நம்பிகளும் ஸம்மதித்துக் கொண்டார்கள். அரசனுடைய கட்டளையால் அபரிமிதமான பழவகைகளும் பக்ஷ்யவகைகளும் நைவேத்யமாக ஸமர்ப்பிக்கப்பெற்றன. நம்பிகளும் பூஜையைச் செய்து முடித்து, அமுது செய்தருளும்படி, ஸ்வாமியை மிகுந்த வணக்கத்துடன் ப்ரார்த்தித்தார்கள். ஸ்வாமியும் தமதுபக்தரது மனதைத் திருப்தி செய்வதற்கும், அரசனது ஸந்தேஹத்தை யொழிப்பதற்கும் திருவுள்ளங் கொண்டு தமது துதிக்கையை நீட்டி, அங்குச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த நைவேத்திய மெல்லாவற்றையும் மூன்று முறையாகக் கிரஹித்து அமுது செய்தருளினர். அரசன், ஆச்சரியமும் நடுக்கமும் கொண்டு, நம்பிகளின் பாதங்களில் வீழ்ந்து, தான் கொண்ட அற்பவெண்ணத்துக்காகத் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான். நம்பிகளும் அவனுக்கு அருள் செய்தார்கள். அரசனும் அன்று முதல் தனது ஆசாரியராகக் கொண்டு அவரை வழிபட்டு வந்தான்.

இப்படி யிருக்க, ஒருநாள் இம்மஹான் மூலமாகவே சிதறிக் கிடக்கும் தேவாரங்களைத் தொகுத்து வெளிப்படுத்த முயலவேண்டு

மென்று ஒரு எண்ணம் உதித்தது. அந்த அபிப்பிராயத்தை நம்பிகளிடம் சொல்லிப் பிரார்த்திக்க, நம்பிகளும், அவனது பிரார்த்தனையை நிறைவேற்றுவதாக வாக்களித்தார்கள். உடனே திருக்கோயிலுட் சென்று கணேசப் பெருமானது திருவருளை வேண்டி நிற்க, அப்போது அவர்களது உள்ளத்தில் ஒரு காட்சி தோன்றிற்று. அஃதாவது—தேவாரப்பாக்கள், சிதம்பரத்திலுள்ள சித்ஸபைக்குப் பின்னால் உள்ள ஓர் அறையில், இருப்பதாகக் கண்டதே. இதுமாத்ரமன்றிப் பலநாயன்மார்களது சரித்திரச் சுருக்கங்களையும் ஸ்ரீகணேசப் பெருமானுடைய திருவருளாலேயே பெற்றுக்கொண்டார்கள்.

உடனே, அரசனுக்குத் தெரிவித்து, அவனுடனே கனகஸபையாகிய சிதம்பரத்துக்குச்சென்று, அங்குள்ள தில்லைமூவாயிரம்பிராமணர்களைத் திருப்தி செய்யும் பொருட்டாகவே, ஸ்ரீநடராஜப் பெருமான் பேரில் எழுபது பாடல்கள் பாடிச் சூட்டினார்கள். என்றாலும், அம்மூவாயிரவரும் அவரது வேண்டுகோட்குச் செவிகொடுக்கவில்லை. அரசன்வற்புறுத்திக்கேட்டபோதும், அந்தத்தீக்ஷிதர்கள் "தேவாரங்களைத்திருவாய்மொழிந்தருளிய அம்மூவரே வந்துகேட்டாலொழிய அவை அங்கிருந்துவெளியேற்றப்படமாட்டா" வென்றுசொல்லிவிட்டனர். உடனே அரசன் அவர்களைக் கோபியாமல், அந்த மூன்று ஆசாரியர்களையும் உத்ஸவ கோலத்துடன் நாட்டிய சபைக்கு நேரே எழுந்தருளப் பண்ணுவித்துத், தீக்ஷிதர்களை வேண்டி நிற்க, அவர்களும் ஆஸ்திகர்களாதலால், ஸந்தோஷங்கொண்டு அரசனுக்கு அவற்றை அளிக்க ஸம்மதித்தனர். உடனே அவைகள் வெளியே கொண்டுவரப்பெற்றன. உடனே, அந்த ஏடுகளை மூடியிருந்த மண்ணையும் அழுக்கையும் ஒதுக்கவே அவற்றிற்பெரும்பாகம் செல்லரித்திருக்கக் கண்ட அரசன், தனது ப்ரயத்தனங்கள் எல்லாம் வீணானது தெரிந்து துக்கித்தான். எனினும், அங்குள்ள எல்லார் செவியிலும் விழும்படி ஓர் அசரீரியான வாக்கு எழுந்து, 'அரசே! இந்தக் காலத்துக்கு வேண்டியவைகளே பத்திரப்படுத்தப்பட்டு, மற்றவை எம்மாலேயே மறைக்கப்பெற்றுள்ளன. இவற்றைக் கொண்டு பூஜிஸாதனத்தைப் பூர்த்தி செய்வாய். கவலைப்படாதே' என்றுசொல்லி அவனைக் களிக்கச்செய்தது. பிறகு அரசன், அவற்றைத் தொகுத்

தருளும்படி நமது நம்பிகளைப் பிரார்த்திக்க, அவர்களும் அப்படியே செய்தார்கள்.

ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானது திருப்பாசுரங்கள் மூன்று திருமுறைகளாகவும், வாகீசரது பாசுரங்கள் மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திகளது பாசுரங்கள் ஒரு திருமுறையாகவும் கோக்கப் பெற்றன. பின்னர் எட்டாவதாக மணிவாசகப் பெருமானுடைய அருளிச்செயலும், திருமூலர்து திருமந்திரம் பத்தாவதாகவும் சேர்க்கப் பெற்றன. திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்மருடையபாசுரங்களை ஒன்பதாவதாகக்கோத்தார்கள். கடைசியில் பதினொன்றாவது திருமுறையாக திருவாலவா யுடையார் முதலிய பதினொருவருடையவும் நம்பியாண்டார் நம்பிகளுடையவுமான பாசுரங்கள் கூட்டப் பெற்றன.

இதன்மேல், நமது நம்பிகள், பொள்ளாப் பிள்ளையார் அநுக்கிரஹித்த வண்ணமாக, பல நாயன்மார்களுடைய வைபவங்களையும் சுருங்கச் சொல்லி, அந்தாதித் தொடையாக எண்பத்தொன்பது பாசுரங்களைச் செய்தருளினார்கள். இந்த நூலே, பக்திக் கடலாகிய சேக்கிழார் ஸ்வாமிகள் தொண்டர் புராணம் செய்தளிக்கத் தக்கதொரு முதனூலாக இருந்ததென்பர். நாயன்மார் பலருள், நமது நம்பிகட்கு, ஸ்ரீ ஆளுடைப்பிள்ளையாகிய ஞானசம்பந்தப் பெருமானிடமே பக்தி பெருகியிருந்த தென்பர். நம்பிகள், வேதநெறியும் சைவத்துறையும் தழைத்தோங்க வந்தவதரித்த ஸம்பந்தமூர்த்திகள் பேரில் தனித்தனியாக ஆறுக்ரந்தங்கள் அருளிச் செய்திருக்கின்றார்கள். திருநாவுக்கரசுகட்கும் ஒரு ஏகாதசமாலை பாடியருளியிருக்கிறார்கள்.

இவைகள் இவ்வண்ணம் தொகுக்கப்பட்டனவேனும், அவற்றைத் தக்க பண்ணுடன் ஓதவல்லாரைக் காணாது, நம்பிகளும் அரசரும், மிகக்கவிழ்ந்தபின்னர் செய்தவிசாரணையில், திருநீலகண்டப் பெரும்பாணரது வமிசத்தில் உதித்துள்ள ஒரு பெண்ணரசிக்கு, இவற்றைப் பண்ணுடன் ஓதும்முறை வழிவந்துளது என்று தெரிந்துகொண்டு, அந்த அம்மை வாழ்ந்திருந்த கிராமத்துக்குச்

சென்றார்கள். அக்கிராமம் எருக்கத்தம்புலியூர். அஃது இப்போது சிதம்பரம் தாலூக்காவைச் சேர்ந்த ராஜேந்திரபட்டணமாக இருக்கிறது. அரசன் உடனே அங்குச்சென்று, அந்த அம்மையை மிக்க மரியாதையுடன் பல்லக்கில் ஏற்றிக் கனகஸபைக்கு அழைத்துவந்து ஸ்ரீ நடராஜப்பெருமானது ஸந்நிதியில் ஓதும்படி வேண்டினன். அம்மையும் அங்ஙனமே ஓதிவர, அரசனது ஆணையால், சிலசைவர் அதனைக்கவனத்துடன் ஏற்றுத் தங்கள் பரம்பரையில் அந்தப்பண் முறையைப் பரவ விட்டனர். இச்சைவர்களே இப்போது ஓதுவார்களென்று அழைக்கப்படுகிறார்கள் என்பர்.

இப்படியாக, நமது நம்பிகள், பின்னர்த் தேவார ரக்ஷகர் என்னும் நாமத்தையும் பெற்றார்கள். அவர்கள், மேலேசொல்லியுள்ளபடி பலவிதமான பக்திக்ரந்தங்களைச் செய்துள்ளார்கள். அவர்கள் இரட்டைமணிமாலை அந்தாதி விருத்தம் மும்மணிக்கோவை உலா-மாலை கலம்பகம் தொகை முதலிய அநேக திவ்யப்ரபந்தங்களைப்பாடியருளியிருக்கின்றார்கள். வடமொழியில் அவர்கள்யாதும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

பெரிய புராணமுடையாராகிய சேக்கிழார் ஸ்வாமிகள், நமது நம்பிகள் பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியையே தமக்கு முதனூலாகக்கொண்டுத் தொண்டர் புராணம் செய்துள்ளாரென்பர். ஆகையால் நம்பிகள் சேக்கிழார் பெருமானுக்கு முற்காலத்தவரெனவே கருதற்கு இடமிருக்கிறது.

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனு
மேராரு மிறைவனையு மெழிலாரு நம்பியையு
மாறாத வன்பினுட னடிபணிந்தங் கருள்விரவச்
சேராத காதன்மிகுந் திருத்தொண்டர் பதந்துதிப்பாம்.

# சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

காரைக்குடி "ரீடிங்ரூம் அண்டு யூனியன் கிளப்" நான்காவது வருஷபூர்த்திக்கொண்டாட்டம் - இது தைமீ ௮ (21-1-17) இதற்கென்று அலங்காரஞ்செய்திருந்த காவணத்தில் விமரிசையாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அக்கிராஸனாதிபதியாக வந்திருந்த திருச்சிராப்பள்ளி ஸப்ஜட்ஜ் ஸ்ரீமத் A. S. பாலசுப்பிரமணிய ஐயர் B. A. B. L. அவர்களை இவ்வாசகசாலையின் மெம்பர்களும் ஏனையோருமாகச் சாலை 9 மணிக்குப் பாண்டுவாத்தியங்களுடன் ஸபைகூடமிடத்திற்கு அழைத்துவந்து, அக்கிராஸனத்தில் அமர்த்தினார்கள். கடவுள்வாழ்த்துக்கூறி வந்தனோபசாரப்பத்திரமும் படித்தானபின்னர், அக்கிராஸனாதிபதியவர்கள் எழுந்து செய்த முகவுரைப்பிரசங்கம் யாவரும் பாராட்டத்தக்க அரியபல விஷயங்களை அடக்கிக்கொண்டிருந்தது. அவற்றுள் முக்கியமானவை (1) புராதன தருமமும் குலதருமமுமாகிய ஸநாதன தருமத்தை இனியேனும் யாவரும் கைப்பற்றி நடந்து முன்னேறவேண்டும். (2) நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இதுவரையிலிருந்தது போலிராமல் தங்கள் சமூகத்துச் சிறுவர்களுக்கு இனிப் பொதுக்கல்வியையும் வியாபாரக்கல்வி மற்றைத் தொழிற்கல்விகளையும் காலத்துப் போதிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். (3) நகரத்தார் வியாபாரங்களில் ஏஜண்டுகளையே நம்பிவிட்டுவிடாமல் தங்கள் நேர்ப்பார்வையைச் செலுத்திவரவேண்டும். (4) இவர்களுக்குள் முன்னிருந்த ஜாதியொற்றுமை (எளியாரை வலியார் தாங்கி உயர்த்துவது, கச்சேரியேறாமை முதலியன) மறுபடியும் ஏற்படவேண்டும், என்பனவாம்.

அதன் பின்னர் மதுரை பிரபல வக்கீல்களுள் ஒருவரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துக் கௌரவ காரியதரிசியாகி அதன் வளர்ச்சியினிடத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்து வருபவருமாகிய Mr. T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் B. A. B. L. அவர்களாலும், திருநெல்வேலி Mr. வைரவநாதன் பிள்ளையவர்களாலும் முறையே நாட்டுக்கோட்டையார்களின் வியாபாரமுறை, கைத்தொழில் என்னும் விஷயங்கள் அழகாகப்பேசப்பெற்றன.

மாலையில் பக்தி, ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர்சரித்திரம், இராஜவிசுவாசம், சேக்கிழார் பெருமை என்பவற்றை முறையே புதுக்கோட்டை காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ இராமசாமி ஐயங்கார், டெ காலேஜ் உபாத்தியாயர் ஸ்ரீ M. சிதம்பர ஐயர் B. A., மதுரை T. C. ஸ்ரீநிவாஸய்யங்கார்,

B. A. B. L. சென்னை ஸ்ரீ வஸிஷ்டபாரதியார் ஆகிய நால்வரும் பிரஸங்கித்தார்கள். 5 மணிக்குமேல் டீ பார்ட்டி (Tea party) நடந்தது

இராத்திரி வீணைக்கச்சேரியும் கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன. இராஜவாழ்த்தும் மங்களவாழ்த்தும் பாடப்பெற்று உபசாரங்களுடன் ஸபைபூர்த்தியாயிற்று.

---

**கோநகர் ஞானசம்பந்த நற்சபை.**—இதன் மாதாந்தரக்கூட்டம் தைமீ ௰௪௳ (26-1-17) பிற்பகல் 4 மணிக்குக்கூடிற்று. உள்ளூர் டாக்டர். ஸ்ரீமத் S. A. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க, க. வி. கலாசாலை உதவியுபாத்தியாயர் ஸ்ரீ அம்பலவாணபிள்ளையவர்கள் திருநீலகண்ட நாயனார் சரித்திரத்தையும்; வித்தியாபாநு பத்திராதிபரும், கம்பராமாயணப்ரசாரகருமாகிய ஸ்ரீ M. V. கோவிந்தராஜஐயங்காரவர்கள் சீதாகலியாணத்தையும்; சொக்கலிங்கம்புத்தூர் மா. வா. வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்திஐயரவர்கள் கம்பராமாயணத்திற் சில குறிப்புகள் என்பதனையும்; பலவான்குடி சி. வி. வித்தியாசாலைத்தலைமையாசிரியர் ஸ்ரீ வீ. குமாரவீரய்யரவர்கள் நன்றியறிதல் என்பதனையும்; சிதம்பரம் ஸ்ரீ வைத்தியலிங்கசாமியவர்கள் அமர்நீதிநாயனார் சரித்திரத்தையும் முறையே அழகாகப் பிரஸங்கித்தார்கள். இராத்திரி 8 மணிக்கு சபைபூர்த்தியாயிற்று.

---

**தேவகோட்டை வைசியசிவாநந்தசபை.**—இதன் நான்காம் வருஷபூர்த்திக்கொண்டாட்டம் தைமீ ௰௬, ௰௭, ௰௮ (1917௵ ஜனவரிமீ 28, 29, 30,) தேதிகளில் மிகவும் விமரிசையாய் நடைபெற்றது. இதற்காக அழைக்கப்பெற்றிருந்த வித்வான்களிற் பெரும்பாலாரும் பிரபுக்களும் வந்திருந்தார்கள். சென்ற மூன்று வருஷோத்ஸவங்களைப்பார்க்கிலும் இவ்வருஷோத்ஸவத்தில் ஸபையலங்காரமும், போஜனவசதிகளும் மற்றையேற்பாடுகளும் நன்றாக அமைந்திருந்தன. சபையின் நிரந்தர அக்கிராசநாதிபதி ஸ்ரீமான் ராம. மெ. சித. வயிரவன்செட்டியாரவர்களும், மற்றும் இச்சபையின் ஸம்பந்தம்பெற்ற கனதனவான்களும் நகமுஞ் சதையும்போல ஒற்றுமையாயிருந்து ஐக்கியத்துடனே காரியங்களை நிர்வகித்தார்கள்.

மூன்றுநாளிலும் சாயங்காலம் 3 மணிக்குமேற் சபைகூடிற்று. சுமார் 800 க்குமேற்பட்ட புருஷர்களும், 200 க்குமேற்பட்ட ஸ்திரீகளும் பிரசங்கங்களைக்கேட்க ஆவலோடு வந்திருந்தார்கள். 3 நாளும் சபை ஜனங்களால் நிரம்பியிருந்தது. டிப்டிகலெக்டர் ஸ்ரீமத் ராய்பகதூர் T. N. சிவஞானம்பிள்ளைய

வர்கள் மூன்றுநாளும் அக்கிராசனம்வகித்து மிகவும் சிறப்பாக நடத்தினார்கள். முதனாள் ஞாயிற்றுக்கிழமை மூன்றுமணிக்கு வாத்திய கோஷங்களுடன் அக்கிராஸனாதிபதியவர்கள் ஸபைக்கு வரவேற்கப்பட்டார்கள். கடவுள் வாழ்த்தும் இராஜவாழ்த்தும், தேவாராதியருட்பாக்களும், இங்கோத தரும வித்தியாஞானோதய சங்கத்தின் நிர்வாகத்தில் நடைபெறும் வைசியமித்திரன் பெண்பாடசாலையின் மாணவிகளாலே பாடப்பெற்றன. ஸபாநாயகரின் வரவேற்பு உபசாரபத்திரத்தைக் காரியதரிசி ஸ்ரீமான் நாக. ஆ. ராம. நாகப்பசெட்டியாரவர்களும், வருஷாந்தர அறிக்கைப்பத்திரத்தைக் காரியதரிசி ஸ்ரீமான் உ. ராம. உ. மு. சுப். இலட்சுமணஞ்செட்டியாரவர்களும் வாசித்தார்கள். இதன்மேல் ஸபாநாயகர் சுருக்கமான முகவுரை கூறினர்.

முதனாளில் ஏழு உபந்நியாசங்கள் நடைபெற்றன, அவையாவன,— (1) கல்வி-முற்கூறிய வைசியமித்திரன் பெண்பாடசாலையின் மாணவி ஞானம்பாள். (2) ஜீவகாருண்ணியம்—ஷை மாணவி அலமேலு (3) மூர்த்தியுபாசனை—திருநெல்வேலி ஸ்ரீ சங்கரமூர்த்தி முதலியாரவர்கள் (தேவகோட்டை சிவாகம சித்தாந்தபரிபாலன சங்கசைவப்ரசாரகர்.) (4) யாழ்ப்பாணம் ஸ்ரீ வ. மு. இரத்தினேசவையரவர்கள் எழுதிய "நன்மை நாடல்" என்னும் வியாசம்—சபையின் அங்கத்தினரில் ஒருவராகிய ஸ்ரீ சி. அ. சு. அ. இராமநாதன்செட்டியாரவர்கள். (5) பிராணாயாமம்— சபையின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீ. அரு வெ. நா. வெ. நாராயணன் செட்டியாரவர்கள். (6) கம்பன்— மதுரை ஹைகோர்ட்வக்கீல் ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள். (7) நட்பு—மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள். (8) பெண்மக்கட்குரிய படிப்பு—மதுரை விவேகோதயம் பத்திராதிபர் ஸ்ரீமதி வி பாலாம்பாள் அம்மாள்.

இப்பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ருசியுள்ளனவாயிருந்தன. (பின்னிரண்டு நாளும் இவ்வாறேயாம்-) ஸபாநாயகரவர்கள் ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் சுருக்கமான அபிப்பிராயங்கூறினார்கள்.

இரண்டாநாளில் ஒன்பது பிரசங்கங்களும், மூன்றுநாளில் ஐந்து பிரசங்கங்களும நடைபெற்றன. அவையாவன — இரண்டாநாள் (1) பொதுவிஷயக் குறிப்புகள்— புதுக்கோட்டையைச்சேர்ந்த போசம்பட்டி சர்க்கார் ஸ்கூல் ஹெட்மெச்சர் ஸ்ரீ ஆர். மீனாட்சி சுந்தரமையரவர்கள். (2) பெரியாரைத்துணைக்கோடல்—திருவையாற்று ஸம்ஸ்கிருத காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. சந்தானமையங்காரவர்கள். (3) மனிதவாழ்க்கையும அதன்பயனும்—பலவான்குடி சி. வி. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ குமாரவீரையரவர்கள். (4) புலவர் மனத்தூய்மை—காரைக்குடி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ S. சிதம்பரையரவர்

கள். (5) பக்தி—காரைக்குடி அஷ்டாவதானம் ஸ்ரீ சாமிநாதையரவர்கள். (6) ஜீவகாருண்யம்—சபையின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீ பள. வெ. சு. இலட்சுமணஞ்செட்டியாரவர்கள். (7) ஒழுக்கமும் கல்வியும்—கோனபட்டு க. வி. கலாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ பண்டித அ. கோபாலய்யரவர்கள். (8) கடவுள்—பாளையங்கோட்டை நாட்டுக்கோட்டை வைசியம் பத்திராதிபர் ஸ்ரீ. ப. சொ. ஆண்டியப்பபிள்ளையவர்கள் (9) நாளைக்கு ஆகட்டும் என்ற நமது வழக்கம்—பொசம்பட்டி ஸ்ரீ ஆர். மீனாட்சிசுந்தரஐயரவர்கள்; மூன்றாநாள் (1) சிவஞானசொரூபம்—தேவகோட்டைப் போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீ கலியாணசுந்தரமையரவர்கள். (2) இயம நியமம்—திருநெல்வேலி ஸ்ரீ ப. சிதம்பரநாத பிள்ளையவர்கள் (3) மேன்மக்கள்—புதுவயல் ஞானப்பிரகாசசபைக் காரியதரிசி ஸ்ரீ. வீ. ஆர். சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள். (4) மெய்யுணர்வு—சொக்கலிங்கம்புதூர் மா. வா. வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்தியையரவர்கள். (5) இல்லறம்—கண்டனூர் ஸ்ரீ. தெ. அரு. சித. இராமநாதஞ்செட்டியாரவர்கள்.

இரண்டாநாளிற் பிரஸங்க முடிவதற்கே அதிகநேரம் ஆய்விட்டதனால் ஸபாநாயகரவர்கள் அபிப்பிராயங்கூறுவதை நிறுத்திவைத்திருந்து மூன்றாம் நாளிற்சேர்த்துச் சுருக்கமாகக்கூறி முடிவுரையுங் கூறினார்கள். முடிவுரையில் முக்கியமானவை—தேவகோட்டையிலுள்ள சீமான்களும் சீமாட்டிகளும் கல்விகற்பதற்காக ஒரு நூலையையும் நூலசாலையையும் அதிகத்திரவியங்கொடுத்தாவது தருவிக்கவேண்டுமென்பதும், தேவகோட்டையிலே ஒரு ஹைஸ்கூல் உடனே ஏற்படுத்தவேண்டுமென்பதுமாம். 'இப்பொழுது நடைபெறுங் கொடியயுத்தத்தில நமது சக்கிரவர்த்திக்கு ஜயமுண்டாகவேண்டும்.' என்னும் பிரார்த்தனையை இராஜப்பிரதிநிதியவர்களுக்கும்; 'சென்னைச்சர்வகலாசங்கத்தினரால் இப்பொழுது அனுதாவு செய்யப்பட்டிருக்கும் தேசபாஷைக் கலவியை இனிக்கட்டாயப் பாடமாகவைக்க ஏற்பாடுசெய்யவேண்டும்' என்னும் பிரார்த்தனையைச் சென்னை கவர்ன்மெண்டுக்கும் தந்திமூலம் தெரிவிக்கும்வண்ணம் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது தீர்வானத்தை பிரேரேபணை செய்தவர், சபையின் போஷகர்களுள் ஒருவராகிய ஸ்ரீமான்—அரு. வெ. நா. வெ நாராயணன் செட்டியாரவர்கள். இத்தீர்மானம் முதல் தீர்மானத்தைப்போலவே மிகவும் முக்கியமானதென்பதைப்பற்றிச் சுருக்கமாகவும் அழகாகவும் பேசினார்கள். இத்தகையாராது நன்முயற்சியே ஸபைகளின் வளர்ச்சிக்குக்காரணமாகும். பின்னர், வந்தனோபசாரங்களுடன் இராஜவாழ்த்தும் கடவுள்வாழ்த்தும் பாடப்பெற்று, சபை நன்குகலைந்தேறியது.

இராயவரம் சாரதாவிலாசஸபை.— இதன் மாதாந்தக்கூட்டம் தைமீ 16உ (29-1-17) பிற்பகல் $3\frac{1}{2}$ மணிக்குமேல் நடைபெற்றது. சோளங்கிபுரம்

சைவசித்தாந்த சரபம் ஸ்ரீமத். சிவ. அருணகிரிமுதலியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க, உறையூர் வித்தியாசாலை மாணவர் சேஷையர் என்பவர் 'வித்தை' யென்பதனையும்; கானப்பேட்டை ஸம்ஸ்கிருதவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தர தீட்சிதரவர்கள் பக்தி யென்பதனையும் பற்றிப் பிரசங்கித்தார்கள். இரவு 8½ மணிக்குச்சபை பூர்த்தியாயிற்று.

## பலவான்குடி மணிவாசக சங்கம்.

நள ஷு தை மீ ௨௫ ௨

---

திருவருட்பேற்றால் இன்று நம்மணிவாசக சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் கூடிற்று. கோநகர, கற்பகவிநாயக வித்தியாசாலைத்தலைமையாசிரியர் பிரம்மஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள் தலைமைவகித்து அழகிய முன்னுரை கூறியபின், கோநகர்க் கற்பகவிநாயகக்கலாசாலை உதவியுபாத்தியாயர் பிரம்மஸ்ரீ ஆழ்வாரையங்காரவர்கள் ஈகை யென்னும் விஷயத்தையும்; சிதம்பரம் ஸ்ரீமத் வைத்தியலிங்கசாமிகள் திருஞானசம்பந்தசாமிகள் சரித்திரத்தையும்; தேவகோட்டை ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகரவர்கள் கேள்விமுயல் என்னும் விஷயத்தையும் தக்க நூற்பிரமாணங்களோடு மிகவழகாக வுபந்நியசித்தார்கள். தேசிகரவர்கள இடையிடையே தமிழ்மறையோதி மனங்கவரச்செய்தார்கள். முடிவில் தலைவரவர்கள, உபந்நியாசங்களின் அபிப்பிராயங்களைக்கூறி, மேற்சொன்ன ஈகை சிவனடியார்தன்மை கல்வி கேள்வியுடைமை என்னும் மூன்றிற்கும் உதாரணமாயிருந்த ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் தமிழ்ச்சங்கத்தைநிறுவிய விவரத்தையும், சங்கமாணவர்களையும் வித்துவான்களையும் அன்போடாதரித்தபெருங்கருணையையும், அத்தேவரவர்கள் தமிழினிடத்துக் கொண்டிருந்த உண்மையான நல்லெண்ணமே இப்பொழுது பலவிடங்களிலும் செந்தமிழ்ச்சபைகளும் கலாசாலைகளும் அவற்றை ஆதரிக்குஞ்சீமான்களும் தோன்றினமைக்குக் காரணமென்பதையும், இன்னும் இவைவிருத்தியாகும் என்பதையும் தம்மனுபவவாயிலால் எடுத்துமொழிந்து முடிவுரை கூறினமை கேட்டோர் வியக்கத்தக்கதாயிருந்தது. வந்தனோபசாரங்கூறி ஆசந்தனுடிகள் வழங்க சங்கம் இனிது நிறைவேறிற்று. சண்முகநாதன்.

# வர்த்தமானங்கள்.

---

## காசி ஹிந்து யூனிவர்ஸிடி.

இதனது கோர்ட் என்னும்சபைக்கு ஸ்ரீ பாலகங்காதர திலகரவர்களையும் ஒரு மெம்பராக மேற்படி யூனிவர்ஸிடிக்கு நன்கொடைசெய்தவர்கள் தேர்ந்

தெடுத்திருக்கின்றனர். இந்தக்கோர்ட் என்னும் சபைக்கு 30 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

---

## ராவ் பகதூர் A. C. பிரணதார்த்திஹர ஐயர்.

இவர் காலஞ்சென்ற ராவ் பகதூர் M. ரங்காச்சாரியாரவர்களுக்குப் பதிலாக புஸ்தகப்பதிவு ரெஜிஸ்டராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவர் கல்வி யிலாகாவில் இஸ்பெக்டாராகவிருந்து நல்ல பேரெடுத்து பென்ஷன் பெற்றிருப்பவர்.

---

## ஓர் ஆலயத்திருப்பணி.

தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாலக்குடி யென்னும் ஒரு திவ்விய க்ஷேத்திரமிருக்கின்றது. இதிலுள்ள ஆலயத்தில் பள்ளத்தூர் ஸ்ரீமத் S. M. A இராமசாமி செட்டியார் அவர்கள் திருப்பணி செய்து வருகின்றனர். இத்திருப்பணி முடிய 10 வருஷம் பிடிக்குமாம். இதற்கு 6 லட்சம் ரூபாய் பிடிக்குமாம். இவ்வாலயத்திற்கருகே ஒரு ரெயில்வேஸ்டேஷனை திருப்பணிக்காக ஏற்படுத்த அவர் முயற்சிசெய்துவருகின்றனர், அதற்காக 4000 ரூபாய் கொடுக்கவுமுடம்பட்டிருக்கின்றனர். திருவாலக்குடியென்பது நன்னிலம் வெட்டாறு என்னும் ரயில்வே ஸ்டேஷன்களுக்கு நடுவேயிருக்கின்றது.

---

## திருவாங்கூர் மகாராஜாவின் ஷஷ்டிபூர்த்திக் கொண்டாட்டம்.

திருவாங்கூர் மகாராஜாவின் ஷஷ்டி பூர்த்திகாலத்திற்குப் பரோடா மகாராஜாவும், மைசூர் மகாராஜாவும், கொச்சி புதுக்கோட்டை இராஜாக்களும், திவான் பகதூர் ராஜகோபாலாசாரியார் அவர்களும், ஸ்ரீமான் V. P மாதவராயரும், ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ராவ அவர்களும் விஜயஞ் செய்வார்களென்று தெரிகின்றது.

---

## ஒரு கோடியே ஐந்து லட்சம் போர்வீரர்.

அமெரிக்கா ஐக்கிய மாகாணத்துத் தேசக்காப்புக் கமிட்டியார் இந்தக்ஷணத்திலும் தகுதியுடையவராக ஒரு கோடியே ஐந்து லட்சம போர்வீரர் சண்டை செய்யத் தயாராயிருக்கின்றனரென்று மதிப்பிட்டிருக்கின்றனர்.

---

## துப்பாக்கி வைத்துக்கொள்ள உத்தரவு.

ஐக்கியமாகாணத்துக் கவர்ன்மெண்டார் கொள்ளைக்கூட்டத்தார் செய்யும் உபத்திரவங்களினின்றும் தப்புவதற்காக ஸக்கேல் என்னுமூரில் வசிக்கும் ஹிந்துக்களும் சேகியர்களுமாயுள்ள 49 பேர்க்கும் 39 மகம்மதியர்களுக்கும் பெரிய துப்பாக்கி அல்லது கைத்துப்பாக்கி வைத்துக்கொள்ளலாமென்று உத்தரவு கொடுத்திருக்கின்றனர்.

---

## பாடசாலைகளில் மதபோதனை.

லண்டனில் சில வாரங்களுக்குமுன் ஒரு மீட்டிங் நடைபெற்றது. அதில் பலர் ஒவ்வொருபாடசாலையிலும் ஒவ்வொரு மதபோதகர் அவசியமாகவிருக்க வேண்டுமெனவும், மதபோதனையில்லாத கல்வியால் பயனொன்றுமில்லை என்றும் பேசினார்கள். இந்தியாவிலுள்ள பாடசாலைகளில் மதபோதனையில்லாதிருப்பதை நம்மனோர் பெரிதுங் கவனித்தல்வேண்டும்.

---

## ஒரு விசித்திரமான செப்பளின்

கான்ஸ்டன்ஸ் என்னும் எரிக்கருகேயுள்ள பிரெடெரிக் ஷேவனென்னுமிடத்தில் ஒரு செப்பளின் கட்டப்பட்டிருக்கிறது. அது சப்தமில்லாது செல்லுமாம். அதனை ஒருவிதமான காகிதத்தால் மூடிவிடலாமாம். அப்போது அது கண்ணுக்குப் புலப்படாதாம்.

---

## ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமி பூஜை
## சிவன் கோயிலில் கூடாதாம்.

தூத்துக்குடியிலுள்ள சங்கராமேசுவர கோயிலில் அக்கோயிலினதிகாரிகளுள் சிலர், ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் விக்கிரகமொன்று வார்த்து வைத்துப் பூசை நடத்திவரவேண்டுமென்று முயற்சிசெய்து வருகின்றனர். மற்றஅதிகாரிகள் அவ்வாறு செய்தல் கூடாதென்று தடுத்து சப்கலெக்டருக்கு ஆட்சேப மனு ஒன்றனுப்பியிருக்கின்றனர்.

---

## இந்துக்களை ராணுவத்திற் சேர்த்தல்.

பஞ்சாப் மகாணத்துக் கவர்ன்மெண்டார் பஞ்சாப்பிலுள்ள படித்த வகுப்பாரிலிருந்து ராணுவச்சேவகத்திற்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுத்து ஒரு படைசேர்க்க வேண்டுமென்று உத்தரவு செய்திருக்கின்றனர்.

---

## வங்காளக் கவர்னரின் வாக்கு.

வங்காளக்கவர்னராகிய லார்ட் கார்மைகேலவர்கள் சமீப காலத்திற்குள் தமது பதவியினின்றும் நீங்கிச்செல்லுகின்றார். அவர் சென்றவாரத்தில் டாக்கா நகரிலிருந்து புறப்பட்டபோது டாக்கா ஜனசமூகத்தினர் பலர்கூடி அவர்க்குப் பிரிவு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். அப்போது கவர்னரவர்கள் பேசியதாவது இந்தியாவின் முன்னேற்றத்தை வற்புறுத்துதற்குரிய சமயம் எனக்கு வாய்க்குமாயின், இந்தியாவில் கிடைக்குள்ள அநுபோகத்தைக் கொண்டு இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வேண்டியதைச்செய்ய ஆதரவாயிருப்பேனென்று நீங்கள் நிச்சயமாக நம்பலாமென்று கூறினர்.

---

## ஒருவரது பட்டம் ரத்து செய்யப்பட்டது.

பம்பாய் மாகாணத்திலுள்ள லோரனேச்சேர்ந்த மகம்மது இஸ்மேயில் வடாப்டுல்லா பிஹாஜி என்பவர் கான்சாகிப் பட்டம்பெற்றிருந்தார். அவர் தவறாக நடந்தமைபற்றி அப்பட்டத்தைக் கவர்ன்மெண்டார் ரத்து செய்து விட்டனர்.

---

## தீர்க்கதரிசனஞ் சொல்லுமொரு சிறுவன்.

இராமநாதபுரம் ஜில்லா கமுதிக்கு பன்னு மூர்க்கடுத்துள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் சுமார் 16 வயதுள்ள ஒரு கிறிஸ்தவச்சிறுவன் சனிவாரந்தோறும் இரவில் எண்ணெயிட்டு முழுகிப் படுத்துக்கொள்ளுகிறானாம். அப்போது தீர்க்கதரிசனம் (குறி) சொல்லுகிறானாம். அவன் அது சொல்லும்போது அவனுடம்பு கட்டைபோல் உணர்ச்சியில்லாமலிருக்கின்றதாம்.

---

## பருவ நிலை.

சித்திரையும் வைகாசியும் இளவேனிற் காலமென்றும் ஆனியும் ஆடியும் முதிர்வேனிற் காலமென்றும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிற் படித்தோம். இது பல நூற்றாண்டுகளின் முன்பு சரியாக இருந்தது. பஞ்சாங்கக் கணக்குத் தவற்றினால் பருவகாலத்தையும் தவறவிட்டோம் இப்போது, இளவேனிற் காலம் பங்குனிமாதம் 8 தேதியில பிறந்து விடுகிறது. ஆதலால நம்மவர் அயன, விஷு காலங்களில் செய்யும் ஸ்நாநம் தானம் முதலிய வைதிகக் கிரியைகளெல்லாம ஷெ புண்ணியகாலங்கள் கழிந்து மூன்று வாரங்களுக்கப்பால் தவறாக நடந்து வருகின்றன. அயன, விஷுவக்களை நோக்கித் தெரிந்து பஞ்சாங்கத்தில வருஷப்பிறப்பைச்சரியான நாளில் வைத்தால், பருவக் கணக்கும் நேராகும். காலநிலையை அறிந்துக்கொள் பலவீனத்திலே மறந்திருக்கிறோமே. உடனே செம்மைப் படுத்திக்கொள்ளும் திறமையை நமக்குத் தேவர்களும் ரிஷிகளும் அருள் செய்க.

க. யி.